



# ஞானச்சுடர்

## மலர்

புரட்டாதி 1999




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறள் வழி

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று."

பொருள்:-

இனிய சொற்கள் இருக்க வன்சொற்கள் கூறுதல் கனியிருக்க காயை தின்பது போன்றது.

ஸ்ரீ

### அருணாசல அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ!

91) ராப்பக லில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா வருணாசலா (அ)

92) லட்சியம் வைத்தரு ளஸ்திரம் விட்டெனைப்
பட்சித்தாய் பிராணனோ டருணாசலா (அ)

93) லாபநீ யிகபர லாபமி லெனையுற்று
லாபமென் னுற்றனை யருணாசலா (அ)

94) வரும்படி சொலிலை வந்தென் படியள
வருந்திடுன் றலைவிதி யருணாசலா (அ)

95) வாவென் றகம்புக்குன் வாழ்வரு ளன்றேயென்
வாழ்விழந் தேனரு ளருணாசலா (அ)

[தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 21

1999 புரட்டாதி

07 OCT 1999

## பொருளடக்கம்

பக்கம்

| | | |
|---|---|---|
| 1) | பிள்ளையார் சுழி | 1 - 2 |
| 2) | சிந்தனைத் துளிகள் | 3 - 5 |
| 3) | பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவாய் மலர்ந்து அருளியவை | 6 - 7 |
| 4) | உயர்திரு செல்லப்பா சுவாமியார் | 8 - 9 |
| 5) | கேதார கௌரி விரதம் | 10 - 12 |
| 6) | கார்த்திகைப்பெண்களும் கந்தவேளும் | 13 - 14 |
| 7) | சிவநெறி | 15 - 18 |
| 8) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 19 - 21 |
| 9) | பெண்மையின் கொடுமுடி தாய் | 22 - 25 |
| 10) | உருள் பூந் தண்தார் புரளும் மார்பினன் | 26 - 30 |
| 11) | ஆசிரியர் தெய்வங்களாக மதிக்கப்பட்டனர் | 31 - 34 |
| 12) | சந்நிதியான் | 35 - 38 |
| | மாணவர் பக்கம் | |
| 13) | சிவலிங்கம் | 39 - 40 |
| 14) | Easy Way to Learn English (Part–20) | 41 - 42 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான சுகம் தரும்
# “ ஞானச்சுடர் ”

ஞானச் சுடர்தன்னைக் கண்டு கொண்டேன்
ஞான சுகமருள் திறன்கண்டு வியந்தேன்
ஈனப் பிசாசு ‘தான்’ எனும் போதினில்
எண்ணத்தில் மயக்கம் ஒடுங்கிடக் கண்டேன்
ஊனம் சூழா சைவத்தின் உயர்வை
உரைத்திடும் பொழுது உலகை மறந்தேன்
பானமாய்ப் பருகினேன் பதி ஞானத்தைப்
பரமனைச் சிந்திக்கும் பக்குவ முற்றேன்.

அன்பே சிவமென்னும் வேத மந்திரத்தை
அறியாப் பாலரும் அறிந்திடச் செய்தாய்
துன்பமில்லைச் சிவனைத் தொழுதால் அவன்
தூய வடிவு அறிவென்றாய் தாரணியில்
மன்னுயிர் அனைத்தும் மக்கள் ஈசனுக்கெனு
மெய்ஞ்ஞானம் பெற்றுய்ய மார்க்கஞ் சொன்னாய்
நன்மக்கள் போற்றிசெய நீவர வேண்டும்
ஞாயிறு போல நாழகற்ற வேண்டும்.

மோ. ஷாந்தன் சத்தியகீர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"

## ஆவணி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் ஆவணிமாதத்திற்குரிய வெளியீட்டுரையை யா/ கொண்டாவில் இ. கு. க. பாடசாலை அதிபர் திருமதி சுரேந்திரநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் ஒரு சஞ்சிகை அல்லது ஒரு நூல் ஒருவனுடைய நல்ல நண்பன் என்பதை வலியுறுத்தி அந்த வகையில் ஆத்மீகத்திற்கு வழிகாட்டக்கூடிய ஒருநல்ல நண்பனாகிய ஞானச்சுடரை ஒவ்வொரு மாதமும் இந்தப் பேரவை வழங்கிக்கொண்டிருக்கிறது. எனக்குறிப்பிட்டார். மகாபாரதம் போன்ற இதிகாசங்களை இக்கால சமுதாயத்திற்கு ஏற்றவகையில் ஞானச்சுடர் தாங்கிவருவதும் சிறப்பான ஒரு விடயம் எனவும் குறிப்பிட்டார்கள். சர்வதேச மொழியான ஆங்கிலத்தை சகலரும் இலகுவான முறையில் அறிந்து கொள்ளக்கூடியதாக அதன் ஆசிரியர் அதனை வழங்கி வருவதும் பாராட்டவேண்டிய ஒரு விடயமெனவும் எடுத்துக்கூறி அது தொடர்ந்து வெளிவரவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள்

**மதிப்புரை:-**

இந்த மலருக்கான மதிப்புரையை சிவஸ்ரீ தியாக. சோமஸ்கந்தராஜா குருக்கள் அவர்கள் மேற்கொண்டார்கள். ஆச்சிரமத்தினதும் பேரவையினதும் செயற்பாடுகளைப்பற்றி ஆரம்பத்தில் எடுத்துக்கூறிய குருக்கள் இதுபோன்ற ஒரு ஆத்மீகச் சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிடுவது மிகமிகச் சிரமமான காரியம். அதனை இந்தப் பேரவை மேற்கொண்டுவருவது சைவமக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டிய விடயம் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். இத்தப்பணி தொடர்வதற்கு தன்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். இறுதியாக மலரில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரை பற்றியும் அதன் கருத்துக்களை அடியார்களுக்கு எடுத்துக்கூறி தனது மதிப்புரையை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா
( கிராம உத்தியோகத்தர், சிறுப்பிட்டி கிழக்கு )

திரு. க. சத்தியமூர்த்தி
( இயக்குனர் - நியூ பீக்கன் அக்கடமி, ஆவரங்கால் )

திரு. ச. ஸ்ரீதரன்
( மக்கள் வங்கி, நெல்லியடி )

திரு. கு. அருணகிரிநாதன்
( ஆவரங்கால் )

திரு. வே. சிவபாதராசா
( வதிரி, கரவெட்டி )

திரு. ச, குகதாசன்
( இயக்குனர் - குகன் கல்வி நிறுவனம், ஆவரங்கால் )

திரு. செ. அட்சயலிங்கம்
( ஆசிரியர், அல்வாய் )

உரிமையாளர்
( அம்பாள் புடவை அகம், புத்தூர் )

உரிமையாளர்
( சூர்யா பார்மசி, அச்சுவேலி )

திரு. சி. ஆறுமுகானந்தன்
( சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்" சந்தாதாரர்களுக்கு
# அன்பான வேண்டுகோள் !

மேற்படி இதுவரை காலமும் சந்தாப்பணம் செலுத்தாத அன்பர்கள் தங்களது சந்தாப் பணத்தை காசோலையாகவோ, அல்லது காசுக் கட்டளையாகவோ அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

காசுக் கட்டளை :

**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**

காசோலை :

**செ. மோகனதாஸ்**
**சேமிப்பு க / இல.: 22096**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

அனுப்ப வேண்டிய சந்தாப் பணத்தை அனுப்பி புது வருடத்துக்குரிய சந்தாவை உறுதிப்படுத்தி இப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு சகல சந்தாதாரர்களும் ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் ஆச்சிரமப் பணிகளுக்கு உதவிபுரிய விரும்புவோர் மேலே குறிப்பிட்டவண்ணம் தொடர்பு கொள்ளவும்.

இவ்வண்ணம்
பேரவையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் சுழி



அருட்பெருஞ் சோதியாகிய சிவசோதியிலிருந்து மூலப் பிரகிருதியாகிய மாயை என்னும் கரியகோணத்தில் அறிவற்றுக் கிடந்த எண்ணில் கோடி உயிர்கட்கு அருளும் பொருட்டுத் தனிப்பெரும் கருணையாகிய பராசக்தி தோன்றியது; அதனின்றும் ஆதிசக்தி தோன்றியது. அதினின்று ஞானசக்தியும், அதினின்று கிரியா சக்தியும், அதினின்று இச்சா சக்தியும் தோன்றின. அந்த இச்சாசக்தி விந்து என்ற சுத்தமாயையில் பார்த்தது. அதன் ஆற்றலைத் தாங்கமாட்டாது விந்து சுழன்றது. அதனின்றும் நாதம் தோன்றியது. விந்து சுழியாகவும் நாதம் நீண்ட கோடாகவும் காட்சியளித்தது. அதுதான் நம் முன்னோர்கள் எழுதத் தொடங்கு முன் முதலில் எழுதுகின்ற "உ" என்ற பிள்ளையார் சுழி. பிள்ளையார் முழுமுதற்கடவுள். இது முதலில் எழுதும் விந்து நாதக்குறி. ஆதலால் பிள்ளையார் சுழி எனப்பெற்றது.

எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் பிள்ளையார் சுழி போட்டு விட்டோ அல்லது "சுக்லாம் பரதரம்" என்று குட்டிக்கொண்டோ தான் ஆரம்பிக்கிறோம்.

எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் முதலில் பிள்ளையாரை வணங்கிவிட்டுத்தான் அந்தத் தெய்வத்தை வணங்குவோம்.

பார்வதிக்கும் பரமசிவனுக்கும் விவாகம் நடக்கிறது. அப்பொழுது ரிஷிகள் முதலில் விநாயகர் பூஜை செய்யுங்கள் என்று சொல்ல, பார்வதியும் பரமசிவனும் விநாயகர் பூஜை செய்கின்றனர். இவ்வாறு கூறுகின்றார் துளசிதாசர்.

"இது என்ன வேடிக்கை! பெற்றோர்களுக்கே இப்பொழுது தான் திருமணம் நடக்கிறது" அதற்குள் அவர்கள் மகன் விநாயகர் எங்கிருந்து வந்தாராம்" என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் தத்துவம் என்னவென்றால் பார்வதி பரமசிவன் விநாயகர் மூவருமே அனாதி. ஏதோ ஒரு அவதாரத்தில் பார்வதி பரமேசுவரன் வருகிறார்கள்.

ஆயுதம் தாங்காத அகிம்சை பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் என்றாலே,, தலைவர் இல்லாதவர். அதாவது எல்லோருக்கும் தலைவர் என்று பொருள். அவர் பிரணவத்தின் சொரூபமானதால் அப்படி அழைக்கப்பட்டார். விநாயகரை வணங்கினால் அவர் விக்கினங்களைத் தடுப்பார். வணங்காவிட்டால் விக்கினங்களைக் கொடுப்பார். இதில் அவர் பாரபட்சம் காட்டுவது கிடையாது.

திரிபுரங்களை எரிக்கச்சென்ற சிவன் விநாயகரை மறந்தார். அதனால் சிவனுடைய தேரின் அச்சு முறிந்தது. பின்பு அவர் விநாயகரை நினைந்து வணங்கிய பின்புதான் தேர் சரியாயிற்று. அதேமாதிரி வள்ளியை மணம் புரியச் சென்ற முருகன் விநாயகரை மறந்தான் அதனால் அவருடைய நோக்கம் நிறைவேறவில்லை முருகன் கணபதியை வேண்டிக் கொண்ட பிறகுதான் அவருடைய நோக்கம் கை கூடிற்று.

விநாயகமூர்த்தியை உள்ளன்புடன் வழிபடுவோர் நீண்ட ஆயுள், நிறைந்தசெல்வம், நன்மக்கட்பேறு, நோயற்றவாழ்வு, நவநிதிப்பேறு, மனஅமைதி முதலிய எல்லா நலன்களும் பெறுவார்கள்.

விநாயகருடைய திருமேனி இடையில் கீழேபூத உடம்பு, இடைக்கு மேல்கழுத்துவரை தேவஉடம்பு, தலை மிருகத்தலை, ஒருகொம்பு ஆண் தன்மை, கொம்பில்லாதபகுதி, பெண்தன்மை, யானைத்தலை, அஃறிணை, தெய்வசரீரம் உயர்திணை, இவ்வாறு எல்லாம் ஆயதிருவுருவம் விநாயகரது வடிவம். பூதமாய், தேவராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் எல்லாமாய் விளங்குபவர் விநாயகர்.

அடியார்க்கு எளிதில் இன்னருள் புரியும் கருணைக்கடல் கணேசர். ஆகவே விநாயகரை நாம் என்றும் வணங்குவோமாக!

கா. கணேசதாசன் J. P.

சேகரித்த செல்வம் நிறைய இருந்தாலும், செலவிட்டுக் கொண்டே போனால் மை போல் அது கரைந்து போகிறது; சேர்த்த செல்வம் கொஞ்சமாக இருந்தாலும், விருத்தி செய்து வந்தால் எறும்புப் புற்றுப் போல் அது பெருகி வளர்கிறது.

ஆகவே செல்வத்தை எப்போதும் தேடிச் சம்பாதிக்க வேண்டும் பெறாத செல்வத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். சம்பாதித்ததைக் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றியதை விருத்தி செய்ய வேண்டும்.

பெரியோர் பேச்சு அறிவு தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிர்கள்

## மனிதப்பிறவியின் பயன்

[ தொடர்ச்சி......

வீடுபேறும் வழிகளையும் அப்பர் சுவாமிகள் காட்டிச் சென்றார். சைவ சமயமே சிறந்த சமயம் ஆலயத்தொண்டே சிறந்தது என அவர் செய்த அற்புதங்கள். செயல்பாடுகளை நாம் சிந்திப்போமானால் எம் மனங்களும் அவரின் செயல்பால் கவர்ந்து செயல்பட வைக்கும். தினமும் ( 5 ) ஐந்து நிமிடங்கள் ஆவது மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனைத் தியானித்து வருவோமானால் நன்னிலையடைந்து போலிக்கௌரவம் ஆணவம் ஆகியவற்றை நீக்கி தொண்டுகள் செய்யத் தூண்டும். அவர் காட்டிய வழி செல்வோம்.

ஆனால் இலகுவில் ஈடேற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் தடையாக இருக்கும் இவற்றிலிருந்து படிப்படியாக விடுதலை பெற்று ஈடேற முடியும். இவற்றிலிருந்து விடுபட வேண்டிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு உபபிரிவுகளுமாக மொத்தம் பதினாறு பிரிவுகளுண்டு இவற்றை பதினாறு படிகள் என்பர். படிப்படியாக இப்பதினாறு படிகளையும் கடக்க வேண்டும்.

இவற்றை நாம் நன்கு விளங்கும் பொருட்டே அறிஞர்கள், அருளாளர்கள், அரசர்கள் முன்னின்று ஆலயங்கள் பல கட்டினர். தொண்டுகள் செய்தனர். பல பாடல்கள், வரலாறுகள், உபதேசங்கள் தந்துள்ளனர். அவர்களால் அளிக்கப்பட்ட அனைத்தையும் அறிந்தும், கேட்டும், பார்த்தும் நன்கு சிந்தித்து புரிந்து, உணர்ந்து அவர்கள் காட்டிய வழி செல்வதால், செயல்பட்டால் மும்மலங்களிலிருந்தும் விடுபட முடியும். மற்றவருக்காக பேருக்காக, புகழுக்காக, பெருமைக்காக எதையும் செய்யாது தூய மனத்துடன் உள்ளன்புடன் மனிதப்பிறவியின் பயனை நன்கு சிந்தித்து கடமையாற்றினால், செயல்பட்டால், தொண்டுகள் செய்தால் நிச்சயம் நன்னிலையடையலாம். அன்றி சுயநலத்துடன் வஞ்சகம், சூது, கபடம், போட்டி, பொறாமையுடன் செயல்பட்டால் மீண்டும், மீண்டும் பிறந்து துன்பத்திலுழல வேண்டியதுதான்.

ஒருவன் தனது உடம்பின் புறப்பகுதியிலுள்ள அழுக்கை நீக்கும் பொருட்டு குளத்திற்கு சென்றான். குளத்தை பார்த்த போது நீர் தெளிவாகவும் சுத்தமாகவும் இருந்தது சந்தோசத்துடன் நீரிலிறங்கி

★ வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராடினான். நன்கு சிந்தியாது ஆராயாது அழுக்கைப்போக்க எண்ணிப் பார்வையில் சுத்தமாக இருந்த நீரின் அடியில் இருந்த சேறு கலங்கி நீர் அழுக்கானதுடன் அவனின் உடம்பு முழுவதும் சேறுபடிந்துவிட்டது. அழுக்கை அகற்றப் போய் இன்னமும் அதிகமாக்கி விட்டான் இதையே முதியோர் 'குளிக்கப் போய் சேறுபூசிய நிலை என்பர்'' இது போலவே எம் மில் பலர் ஆலயத்திற்கு வணங்கச் சென்று பேராசையால் போலிக் கௌர வத்திற்காக, செல்வாக்கு போன்ற அதிகாரத்தால் பல தவறுகளைச் செய்கிறார்கள். உண்மையான விசுவாசமாகச் செய்யும் புனித தொண்டு களை அசிங்கப்படுத்துகின்றனர். அடியார்களின் மனதைப் புண்படுத்து கின்றனர். இப்படிப்பட்டவர்களின் செயல்பாடுகளினால் புனித தலங்கள் வர்த்தக ஸ்தாபனங்களாக மாறும் நிலையுருவாகிறது. ஆணவம் அகல வேண்டிய இடத்தில் ஆணவ முனைப்பே மேலோங்குகிறது. ஆலய சூழல் அசிங்கப்படுகிறது. மாயை தனது திருவிளையாடலைக் காட்டு கிறது. மாயையில் மயங்கியே இந்நிலையை உருவாக்குகின்றனர். விசு வாசத்துடன் இறைவனின் அடியார், தொண்டர் என எண்ணிச் செயல் பட்டால் மாயை மறைந்து ஆணவமலம் நீங்கி இறையருள் கிட்டும்.

அகத்தியர் மூலம் அழகிய தமிழை அளித்தார் இறைவன். தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் குறிஞ்சிக்குமரன் தமிழின் அருமை யைப் பெருமையை அறிய வைக்க ஔவையாரின் தமிழ் அறிவின் அறிவை அறிய அவரின் அகந்தையைப் போக்க எண்ணிய அழகுத் தெய்வத்தை வழிபட புரியாத அன்னிய மொழி வேண்டுமா? நமது தாய் மொழியான தமிழால் வழிபடலாமே. நன்கு யாவரும் புரிந்து கொள்ளலாமே. இதற்கு நாயன்மாரே நன்கு வழிகாட்டியுள்ளனர். மனிதனின் ஒவ்வொரு அங்கமும் செய்யவேண்டியது என்ன? அவற்றின் பயன் என்ன? அவற்றை ஏன் எமக்கு அளித்தான் என்பதை நன்கு அழகாக திருவங்கமாலை என்னும் திருப்பதிகத் தொகுதியாகத் தந்துள் ளார்.

நீறிலா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ் என்பதற்கமைய தினமும் அகம், புறம் இரண்டையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கமைய புனித சிந்தையுடன் புனித தலத்திற்குச் செல்லும் போது வெறுங்கையுடன் செல்லாது வசதியற்ற நிலை மலையளவு சுவாமிக்குத் திணையளவு புஷ்பம் என்னும் முதுமொழிக்கமைய பூக்களையாவது கொண்டு சென்று நமக்கும் புரியும் தமிழ் மொழியிலேயே அர்ச்சிக்க வேண்டும். வணங்க

★ நல்ல ஆலோசனையைக் கேட்பது நமது திறமை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். எமது மனம் புனிதமாக இருக்க உடலின் புறப்பகுதி சுத்தமாக இருக்க என்ன செய்கிறோமோ அதுபோல ஆலயத்தையும் சூழலையும் சுத்தம் செய்து புனிதமாக்க வேண்டும் வைத்திருக்க வேண்டும்.

பலர் ஆலயங்களில் தொண்டு செய்ய வெட்கப்படுவதைக் கூச்சப் படுவதை அவதானிக்க முடிகிறது. சிவனடியார்களுக்கு நாட்டை ஆளும் அரசனே தொண்டு செய்த வரலாறுகளை அறிந்த எமக்கு மற்றவர்களுக்காக, போலிக்கௌரவத்திற்காக வெட்கப்பட்டு, பயந்து தொண்டு செய்யாது விடுவதனால் மனிதப் பிறவியின் பயனையடைய முடியாது மீண்டும் பிறந்து அல்லலுற வேண்டும் "உண்டு உண்டு உறங்குவதே ஒழிய வேறொன்றும் கண்டிலேன் பராபரமே" என்பது போலன்றி தொண்டனுக்குத் தொண்டு புரிந்து தொல்லையென்னும் பிறவியிலிருந்து விடுதலை அளி பராபரமே என இறைஞ்சுங்கள் இரங்கி அருள் புரிவான் இறைவன். விளங்காத மொழியால் இறைவனை அர்ச்சிக்காது விளங்கும் இனிய தமிழ்மொழியால் அர்ச்சியுங்கள்.

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் தம் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ் என சிவபுராணத்திலுள்ளதற்கமைய நாம் செய்யும் ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் சொல்லும் சொற்களுக்கும் பொருளுணர்ந்தே செயல்பட வேண்டும் சொல்ல வேண்டும். அதுவே பயனளிக்கும், மந்திரமின்றி மௌனமாகப்பூசை செய்யும் ஆலயங்களில் இருக்கும் மகிமை, புதுமை, பூசை செய்பவரிடம் இருக்கும் சக்தி மந்திரம் சொல்லிப்பூசை செய்யும் ஆலயங்களிலுண்டா? அவர்களின் சக்தியுண்டா? என்பதைச் சற்று சிந்தியுங்கள். வேதமோதுதல் வேதியர்க்கழகு என்பர். இன்று எங்கேயாவது வேதம் ஓதப்படுகிறதா? வேதியர்கள் இருக்கும் இல்லங்கள் எப்படிக்காட்சியளிக்கிறது சிந்தியுங்கள்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் ... ......

என்னும் திருப்பதிகத்திற்கமைய நெகிழ்ந்து உள்ளத்தோடு உளம் உருகி வேண்டுங்கள். சரியைத்தொண்டு புரியுங்கள் மௌனமாக மனதை ஒரு நிலைப்படுத்தித் தியானம் செய்யுங்கள் ஞானம் கிட்டும். மனிதப் பிறவியின் பயனை அனுபவித்து இறைபதமடையலாம்.

க. விஷ்ணுகோபால்

---

★ நான்கு விதத்திலும் சரி என்றால் ஏற்றுக் கொள். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்
# திருவாய்மலர்ந்து அருளியவை

## உலக ஆசாபாசங்களால் விளையும் அபாயம்



ஒரு யக்ஷன் வாழ்ந்து வந்த மரத்தின் கீழ் ஓர் நாவிதன் செல்லும்போது "உனக்கு ஏழு ஜாடி தங்கம் வேண்டுமா?" என்ற ஒரு குரலைக் கேட்டான். அவன் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் கண்ணுக்குப் புலப்படவில்லை என்றாலும், 'ஏழு ஜாடி தங்கம்' என்றதனால் பேராசை கொண்ட அவன் "எனக்கு வேண்டும்" என்று பதில் சொன்னான். நீ வீட்டிற்குப்போ, நான் ஜாடிகளை அங்கு கொண்டு போய் வைத்து விட்டேன் என்ற பதில் உடனே தொனித்தது. இதைப் பரிசோதிக்க எண்ணிய அவன் குடல் தெறிக்க வீட்டிற்கு ஓடினான். உள் நுழைந்ததும் அவன் முன்னர் ஏழு ஜாடிகள் இருக்கக் கண்டான். அவைகளைத் திறந்து பார்க்க ஆறு ஜாடிகளில் தங்கம் நிறைந்தும் ஏழாவது ஜாடியில் தங்கம் பாதியளவுமாக இருக்கக் கண்டான். குறைவாக இருக்கும் இந்த ஜாடியையும் நிரப்பி விடவேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. இல்லா விட்டால் அவன் அடையும் சுகம் பூரணமானதாகாது என்று எண்ணினான். ஆகவே தன்னிடம் இருந்த பொன் வெள்ளி நகைகளை எல்லாம் விற்றுப் பவுணாக்கி அந்த ஜாடியில் போட்டான். என்றாலும் அந்த மாயஜாடி முன்போலவே அரைகுறையாக இருந்தது. பிறகு அவன் தன்னையும் குடும்பத்தையும் பட்டினிபோட்டுச் சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் ஜாடியிலேயே போட்டான். அப்படிச் செய்தும் ஜாடி நிறையவில்லை. அப்பால் அவன் தான் சேவித்து வந்த அரசனிடம் சென்று தன் சம்பளம் காலக்ஷேபத்திற்குப் போதாமலிருக்கிறபடியால் அதை இருமடங்கு அதிகமாக்கும்படி கேட்டுக் கொண்டான். அரசனுக்கு இவனிடம் தயவு இருந்தபடியால் கோரிய எண்ணம் நிறைவேறிற்று. அவன் இந்த அதிகச் சம்பளத்தையும் செலவு செய்யாமல் ஜாடியில் போட்டு வந்தான். அப்போதும் ஜாடி பூர்த்தியாகவில்லை. பிறகு அவன் வேலை இல்லாத காலத்தில், பிச்சை எடுத்து, அதனாற் கிடைத்த பொருளையும் வேலையினாற் கிடைத்த சம்பளத்தையும் பொன்னாக்கி ஜாடியில் போட்டான்.

★ மனிதனைக் கெடுப்பது ஆசை, கோபம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் மாயஜாடி நிரம்பவில்லை. இப்படி அநேக மாதங்கள் கழிந்தன. அவனுடைய நிலைமை வரவரப் பரிதாபகரமாயிற்று. ஒருநாள் அரசன் நாவிதனுடைய ஸ்திதியைக் கண்டு "அடே, இப்போது உனக்குக் கிடைக்கிற சம்பளத்தில் பாதி கிடைத்தபோது நீ சந்தோஷமாயும், திருப்தியாயும் இருந்தாய். இப்போது அதைவிட இருமடங்கு அதிகமான சம்பளம் வரும்போது நீ ஏன் மங்கிய முகத்துடன் கவலையும் விசாரமும் கொண்டவனாக இருக்கிறாய்! ஏழு ஜாடித் தங்கத்தை வாங்கிக் கொண்டாயோ?" என்று கேட்டான். நாவிதன் ஆச்சரியப்பட்டு "மகாராஜாவே! சந்நிதானத்திற்கு இந்தச் சங்கதியை யார் தெரிவித்தார்கள்?" என்றான். அதற்கு அரசன், "எவனிடம் யக்ஷனுடைய செல்வம் வந்திருக்கிறதோ அவன் இப்படிப்பட்ட நிலைமைக்கு வருவான் என்று தெரியாதா?" அவன் இந்த ஏழு ஜாடிகளையும் எனக்குக் கொடுப்பதாகச் சொன்னான். அது 'வரவுப் பணமா? செலவுப் பணமா?' அதாவது அந்தப் பணத்தைச் செலவு செய்ய வேண்டியதா, புதைத்து வைக்க வேண்டியதா, என்று அவனைக் கேட்டேன், கேட்டதும் யக்ஷன் பதில் சொல்லாமல் ஓடிவிட்டான். அந்தப் பணத்தை ஒருவராலும் செலவழிக்க முடியாதென்பதை நீ அறியாயோ. அது இன்னும் சேர்த்து வைக்க வேண்டுமென்னும் ஆசையைத்தான் தரும் உடனே போய்ப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடு என்றான். நாவிதனுக்குப் புத்தி வந்தது அவன் யக்ஷன் வாழும் மரத்தடிக்குச் சென்று 'உன் பணத்தை வாங்கிக்கொள்' என்றான் 'நல்லது' என்று யக்ஷன் பதில் சொன்னான். நாவிதன் வீட்டிற்குத் திரும்பி வந்ததும், மாயமாய் வந்த ஜாடிகள் ஏழும் மாயமாகவே போய்விட்டதையும் அவைகளுடன் அவன் ஆயுளாவும் கஷ்டப்பட்டுத் தேடிய செல்வம் முழுவதும் போய் விட்டதையும் கண்டான். சகல ராஜ்யத்திலும் சிலருடைய நிலைமை இப்படிப்பட்டதாகவே இருக்கிறது. உண்மையான வரவுக்கும், உண்மையான செலவுக்கும் வித்தியாசம் தெரிந்து கொள்ளாதவர்கள் தாங்கள் பெற்றுள்ளவற்றையெல்லாம் இழந்து விடுகின்றனர். (தொடரும்.....

திருமதி செ. அருளானந்தம்

பகைமை இவ்வுலகில் ஒருபோதும் பகைமையால் ஒழிவதில்லை. அன்பினால்தான் அது ஒழியும். அன்பு நிறைந்த நெஞ்சே அனைத்திலும் இன்றியமையாதது. அனைத்து உயிர் மீதும் அன்பாயிருத்தலே உண்மை மதமாகும். வாழும் உயிர்களிடத்தில் எல்லாம் அளவிலா அன்பு கொள்க!

அகந்தையைத் துறந்தால் அருளைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு செல்லப்பா சுவாமியார்

"பேயரே யெனக்கி யாவரும் யானுமோர்
பேய னேயெவர்க் கும்இது பேசினேன்
ஆய னேயரங் காஎன் றழைக்கின்றேன்
பேய னாயொழிந் தேனெம் பிரானுக்கே"

என்பதாம்.

சுவாமிகள் புகழை விரும்பாதவர். யாரேனும் தம்மை வைது பேசினாலும் சிரிப்பாராம். இவரைப் பலர் விசரரென மதித்தாலும் சிலர் இவரின் வாழ்வு ஞானத்தை ஒட்டியதாக இருக்கக் கண்டு இவருடன் பயபக்தியாக நடந்து வந்ததாகக் கூறுவர். அவ்விதம் உணர்ந்த ஒரு கூட்டம் கொழும்புத்துறையிலிருந்தது. அக்கூட்டத்திலும் உயர்ந்த பக்குவசீலராயிருந்தவருள் ஒருவர் காலஞ் சென்ற கிராம விதானையார் திருஞானசம்பந்தர் என்பவர். (அடியேன் சுமார் இருபது வருடங்களின் முன் சிவதொண்டன் பத்திரிகையில் கொழும்புத்துறையும் திருப்பெருந்துறையும் என்னும் கட்டுரையொன்று வரைந்துள்ளேன்) செல்லப்பாச் சாமியாரிடம் திருநோக்கம் பெற்ற யோகசுவாமிகள் ஆன்மீகப்பெருக்கில் முக்கியவராய், கிளிநொச்சியில் தாம் பார்த்த உத்தியோகத்தை விட்டிருக்க வேண்டுமென அனுமானிக்கலாம்.

ஒருமுறை யோகர்சுவாமிகள் நல்லூர் சென்று செல்லப்பாச் சுவாமிகளைத் தரிசித்தபோது அவர், "ஆரடா நீ" "தேரடா உளம்" "தீரடா பற்று" என்று கூறி, உபதேசித்தாராம். நல்லூரிலிருந்து தியானித்த செல்லப்பர் நடுச்சாமத்திற் கோவில் வாயிலிற் சென்று முருகமூர்த்திக்கு முன்னாக இருந்து பலபல தேவவாக்குகளைப் பேசுவாராம். தமது சீடனாகிய யோகர் சுவாமிகளுக்குப் பற்பல சோதனைகளைச் செய்து ஆளாக்கினாரென்பர். தம்மைப்பிரியாதிருந்த யோகர்சுவாமிகளோடு தாமும் சேர்ந்து சமைத்துண்பார். ஒரு நாள் சமைத்த உணவைச் சாப்பிடத் தொடங்கும் போது, செல்லப்பாச் சுவாமிகள் அவ்வுணவையும் கலத்தையும் அப்பால் வீசிவிட்டாராம். ஒரு நாள் இருவரும் கீரிமலைக்கு நீராடச் சென்று, அங்கு நீராடாமல் திரும்பியும் வந்தார்களாம். இவ்வாறு உலகம் நிலையாமையைப் பல சோதனைகள் வழியாக யோகர் சுவாமிகளுக்கு உணர்த்திக் காட்டினார் என்பர். மேலும் ஒரு நாள் ஒரு செட்டி கடையில் இருவரும் பிட்சைக்கு

---

★ முடிந்ததை செய்தால் அதுவே எல்லாவற்றிலும் சிறந்தது. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார்களாம். அக்கடைக்கு உரிமையாளரான செட்டியார் வேகக் கொதிக்கும் வெயிலில் நின்ற இருவரையும் அதிக நேரம் நிற்க வைத்த பின் கணக்குப்பிள்ளை மூலம் இரண்டு சதத்தைக் கொடுப்பித்தாராம். செல்லப்பருக்கு மிகுந்த மகிழ்ச்சி "இன்று இருவருக்கும் நல்ல உழைப்புக் கிடைத்தது; போசனம் என்பது தானுற்றுவிடல்" என்றாராம்.

வருடந்தோறும் இருவருமாய் நடந்து பன்றித்தலைச்சிக்குச் சென்று பொங்கிச் சாப்பிடுவார்களாம். வரும் போதும் போகும் போதும் மற்றைப்போதும் செல்லப்பாச்சுவாமிகளுடன் திரிந்த யோகர்சுவாமிகள், அவர் பேசுவனவற்றுள் சிறந்த தத்துவார்த்தங்களிருக்கக் கண்டு, சமய விஷயங்களைச் 'செல்லப்பனிடமல்லவோ கேட்க வேண்டும்' என்பாராம். அதற்காக, நமது குருநாதரை விட்டுப்பிரியாமல் பல நாட்கள், பல மாதங்கள், பல வருடங்களை யோகசுவாமிகள் கழித்தாரென்றும் அவற்றைச் சிலையிலெழுத்தைப்போல் தமது மனதிற் பதித்து வந்தாரென்றும் கூறியதாக அன்பர் பலர் சொல்லக் கேட்டுள்ளேன்.

உயர் திரு. யோகர்சுவாமிகளோடு கதிரவேலு என்னும் அன்பரும் செல்லப்பாச் சுவாமிகளைக் குருவாகக் கொண்டிருந்தாராம். இந்த இருசீடர்களும், செல்லப்பாச் சுவாமிகளின் தேர் முட்டியடியில் அவருடன் சேர்ந்து நாற்பது நாள் தங்கித் தவமிருந்தார்களாம். அக்காலத்தில், அவர்களுக்கு வேண்டியனவற்றை, மற்றுமொரு இருகண்த சீடர் வழங்கி வந்தாரென அறியக் கிடக்கின்றது. இவ்வாறு தியானத்திலிருந்தவர்களை ஒருநாள் செல்லப்பாச் சுவாமிகள் அவ்விடத்திலிருந்து துரத்தி விட்டாராம். யோகர் சுவாமிகள் இச் சோதனையிற் சித்தி பெற்று விட்டார். அவர் உடனே கிழக்கு நோக்கி நடந்து சென்றார். செல்லும் போது பூரண துறவுவாழ்வில் ஈடுபட்டார். இப்படியான துறவியர் நித்திரைக்குப் பாயையும் உணவுக்குப் பொருளையும் தேடமாட்டார்கள். பல நாள் நடந்து கதிர்காமம் வரையுஞ் சென்று விட்டாராம். யோசித்துப் பாருங்கள். என்ன புதுமை இங்ஙனம் ஆனை கொல்லுமொழிய இப்படியாகத் தனித்து நடந்து கதிர்காமஞ் செல்ல முடியுமா? இதற்கு இறுக்கமான மெய்யுணர்வு வேண்டும்; சாதாரண காரியமல்ல. திருஞான சம்பந்தரை, அப்பரை, சுந்தரரை, மாணிக்கவாசகரை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன்? விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றையும் பார்த்துப் படித்திருப்பீர்களல்லவா! தலைப்பெருமையுள்ள திருத்தலங்களில் சந்நிதிப் பெருமானின் திருவிளையாடலை, அற்புதங்களை, ஒவ்வொரு மாத ஞானச்சுடரிலும் அன்பர் திரு. ந. அரியரத்தினஞ் சேகரித்தெழுது வதையும் நாம் வாசித்து வருகிறோமல்லவா!

[தொடரும்.......

புலவர் வை. க. சிற்றம்பலம்

★ அறியாமல் பிழை செய்தவரை ஏற்றுக் கொள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி விரதம்

திருக்கயிலாய மலையில், நவரத்தின மணி பீடத்தில் தேவர்கள், சிவகணத்தவர்கள், கந்தர்வர்கள் புடைசூழ, சர்வலோக ரக்ஷகரான ஸ்ரீ பரமேஸ்வரன், பார்வதி தேவியுடன் எழுந்தருளியிருந்தார்.



அந்த இரம்மியமான சௌந்தரிய வேளையில் பிருங்கிரிஷி எனும் முனிவர், எம்பெருமானின திருமுன், அற்புதமாக நடனமாடினார். அருந்தவசியின் அபிநயத்தில், பரமசுகம் கண்ட பரமேஸ்வரன், அவருக்குப் பேரருள் பாலித்தார்.

பரந்தாமனின் பேரருளைப் பரிபூரணமாகப் பெற்ற பிருங்கி முனிவர், ஈசனை மட்டும் வலமாக வந்து வணங்கிப் போனார். பிருங்கியின் இச்செயல் சங்கரிக்குச் சினத்தை மூட்டியது.

"ஆடிய பாதம் சக்தியை இழக்கட்டும்" என்று சாபம் கொடுத்தாள் சர்வேஸ்வரி.

பரமன் புன்முறுவல் பூத்தார். பக்தனைக் காக்கத் திருவுள்ளம் கொண்டார். முனிபுங்கவருக்கு மூன்றாவது ஒரு காலும், ஊன்றி நடக்க ஒரு கோலும் கொடுத்துத், தமது பக்கத்திலேயே அணுக்கத் தொண்டராக இருக்கும் படியான சிவப்பேற்றை அளித்தார்.

ஈசனின் இச்செயல், ஈஸ்வரிக்குக் கோபத்தை மூட்டியது. சிவனை மட்டும் வலம் வந்துவணங்குவோர், தம்மையும் சேர்த்து வணங்க வேண்டும் என்று எண்ணினாள். அக்கணமே அம்பிகை கோபம் பொங்க கைலையை விட்டகன்று கௌதம முனிவர் ஆச்சிரமம் வந்தாள். கௌதம முனிவர்

★ குருடனுக்குக் குருடன் வழி காட்ட முடியுமா? ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையின் கோபத்திற்கான காரணத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அதற்கு உபாயமாக அம்பிகையிடம் விரதம் ஒன்றை அனுஷ்டிக்கும்படி சொன்னார்.

முனிவர் சொன்ன விரதத்தைத் தேவி இருபத்தொரு நாள் அனுஷ்டித்தார்.

ஈசன் சுயம்பு லிங்கமாக எழுந்தருளி அம்மைக்கு அருள் பாலித்து தமது திருமேனியில் இடப்பாகத்தைக் கொடுத்தார். அதுவே சிவனும் சக்தியும் சேர்ந்த அர்த்தநாரீஸ்வரர் திருத்தோற்றம்.

"சிவனும் சக்தியும் வேறல்லர்; இருவரும் ஒருவரே" என்ற சிவசக்தி சொரூபமாக அர்த்தநாரீஸ்வரர் திருக்கோலத்தைத் தந்தருள்வதற்காக, ஈசன் நடத்திய அற்புதக் கூத்தினை யாரே அறிய வல்லார்.

சிவன் சக்தியுடன் சேர்ந்திருந்தே பக்தர்களுக்கு முக்தியைக் கொடுத்து அருளுகின்றார்.

சிவனும் சக்தியும் இல்லாவிட்டால் ஜகமே இல்லை. சிவனே அப்பன், சக்தியே அம்மை!

சிவனும் சக்தியும் எல்லாப் பொருளிலும் ஒருவரையொருவர் பிரியாமல் இணைந்திருப்பார்கள்.

பார்வதிதேவி அனுஷ்டித்த இந்த விரதம் கேதாரகௌரி விரதம் என்று பெயர் பெற்றது.

சிவனுக்குக் கேதாரீஸ்வரர் என்று ஒரு திருநாமம் உண்டு. கேதாரம் என்றால் வயல். இமயமலை வயலில் சுயம்புலிங்கமாகத் தோன்றினார் ஈசன். அதனால் இப்பெயர் சித்தித்தது.

பார்வதிதேவி இந்த விரதம் அனுஷ்டிக்கும் போது சித்திராங்கதன் என்ற கந்தர்வன் அம்பிகைக்குத் துணையாக, அடுத்திருந்து தொண்டுகள் புரிந்தான்.

சித்ராங்கதன் தேவியிடம், "அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி! அம்மையே! கற்பகவல்லியே! இந்த எளியேனுக்குத் தேவியிடம் ஒரு பிரார்த்தனை. இத்தகைய சிரேஷ்டமான விரதத்தைப் பூவுலகத்தோரும் அனுஷ்டித்துச் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழப் பேரருள் பாலிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். அம்மையும் அவ்வாறே அருள் செய்தார்.

பரந்தாமனின் பொன்னார்மேனிதனிற் பாதியைப் பெற்ற பர்வதகுமாரி பிருங்கி முனிவருக்குப் பேரருள் பாலித்து அவரைத் தமது புத்திரனாக ஏற்றுக்கொண்டாள்.

---

எதையும் கைமாறு கருதாமல் மற்றவர்களுக்குக் கொடு.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திராங்கதன் உஜ்ஜயினியை ஆண்டுவந்த மன்னன் வஜ்ரதந்தனுக்குக் கேதாரகௌரி விரதத்தை அனுஷ்டிக்கும் முறையை உபதேசித்தான். அம் மன்னன் இந்த விரதத்தை அனுஷ்டித்துச் சகல பேறுகளும் பெற்றான்.

மன்னன் கேதார விரத மகிமையைப் பற்றி நாடெங்கும் பரவச் செய்து விரத மகிமையால் அனைவரும் க்ஷேமமுற வழிகாட்டியாக விளங்கினான்.

## விரதம் அனுஷ்டிக்கும் முறை

இந்த விரதம் புரட்டாதி மாதம் சுக்லபக்ஷ அஷ்டமித் திதியில் தொடங்க வேண்டும்.

ஓர் அம்மியையும் குழவியையும் சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைத்து, அம்மி மீது குழவியை நிற்கும்படி செய்யவேண்டும்.

இப்படிச் செய்வதால் ஆவுடையார்மீது லிங்கம் இருப்பது போலாகும் அம்மியையும், குழவியையும் சிவலிங்க சொரூபமாகக் கொண்டு பூஜையைத் தொடங்கவேண்டும்.

முதலில் பூரண பொற்கும்ப கலசத்தில், எம்பெருமானை ஆவாஹனம் செய்யவேண்டும்.

அதன்பிறகு இருபத்தொரு இழையை உடைய நூலினை ஒன்றாக முறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தப் பூஜையை இருப்பத்தொரு நாள்செய்ய வேண்டும் அனுதினமும் பூஜையின்போது நூலில் முடிச்சு ஒன்று போடவேண்டும். இவ்வாறு இருபத்தொரு நாள் இருபத்தொருமுடிச்சுப் போடவேண்டும்.

இருபத்தோராவது நாள்தீபாவளி வரும் அன்றையதினம் இருபத்தொரு முடிச்சைக் கொண்ட நூலைக்காப்பாக - கங்கணமாகக் கையிற் கட்டிக்கொள்ள வேண்டும். அன்றையதினத்துடன் விரதத்தைப் பூர்த்தி பண்ணிக் கொள்ளவேண்டும்.

இந்த விரதத்திற்கு இருபத்தொரு பழங்கள், இருபத்தொரு பக்ஷணங்கள் என்ற கணக்கில் எல்லாமே இருபத்தொன்றாக இருக்கவேண்டும். இருபத்தொருபேருக்கு அமுது அளிக்கவேண்டும்.

இந்த விரதம் அனுஷ்டிப்பதால் கணவன் மனைவி இடையே ஒற்றுமை, கல்வி, செல்வம், புத்திரப் பாக்கியம் இவைகள் சித்தியாகும்.

தொகுப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம்

அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைப் பெண்களும் கந்தவேளும்

சப்தரிஷிகளான — அத்திரிஷி, மரீசி, அங்கிரசர், புலஸ்தியர், புலஹர், வசிஷ்டர், கிரது ஆகியோரின் பத்தினிகளான அநசூயா, கலை, சிரத்தா, ஹவிர்பூ, கதி, அருந்ததி, கிரியா இவர்கள் கார்த்திகைப் பெண்கள் என்று அழைக்கப்படுவர். இவர்கள் கற்பிலும் அழகிலும், குணத்திலும் சிறந்தவர்கள். இந்தப் பெண்களின் அழகைக்கண்டு, அக்கினி தேவன், அவர்களை அடைந்து இன்புற விரும்பினான். அக்கினிதேவனுடைய மனைவி, 'ஸ்வாஹா' இதை அறிந்தாள். பதிவிரதைகளின் கற்புக்கனல்' தனது கணவனை எரிக்கும் சக்தியாய்ந்தது என உணர்ந்து கலக்கமுற்றாள். கணவனை ரிஷி பத்தினிகளின் சாபத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று தீர்மானித்தாள். சப்தரிஷிகளின் மனைவியர் போன்று, நாளுக்கொரு பத்தினி உருவம் எடுத்து, அக்கினிதேவனின் ஆசையைப் பூர்த்தி செய்து வந்தாள். ஆனால் வசிஷ்ட முனிவரின் பத்தினியாகிய அருந்ததியின் உருவம் எடுக்க முடியவில்லை. அருந்ததியைக் காணாத அக்கினிதேவன், நேரே அவளிடம் சென்று சாபத்துக் காளானான்.

இந்தச் செய்தியை அறிந்த மற்றைப் பத்தினிகளின் கணவர்களான ஆறு ரிஷிகளும் ஒன்றுகூடி, அக்கினியின் மனைவியாகிய 'ஸ்வாஹா', தங்கள் பத்தினிகளின் உருவம் எடுக்கமுடிந்தது; ஆனால் அருந்ததியின் உருவம் மட்டும் எடுக்க முடியவில்லையென்றால், தமது பத்தினிகள் அருந்ததியைவிடப் பத்தினித் தன்மையிற் குறைந்தவர்கள் ஆயினர் எனச் சிந்தித்து, அந்தக் குறையைப் போக்குவதற்கு, ரிஷிகள், பத்தினிமாரை அழைத்து, "நீங்கள் அறுவரும், சரவணப் பொய்கையில் சிவகுமாரராகத் தோன்றப் போகும் முருகனுக்குப் பாலூட்டி வளர்த்து, அவருடைய திருமேனியின் ஸ்பரிசம் பட்டுப் புனிதமாகி வாருங்கள்" என்று கட்டளையிட்டுப் பூவுலகுக்குச் செல்லுமாறு விடை கொடுத்தனர். கணவன்மாரைப் பிரிய மனமில்லாத ரிஷிபத்தினிகள் கவலைப் பட்டார்கள். "பத்தினிகளே! கவலைப்பட வேண்டாம். முருகனை அணைப்பதால் நீங்கள், புனிதராவீர்கள். அருந்ததியை விட மேலான புகழும் உங்களை வந்தடையும் — சென்று வாருங்கள்' என்றனர்.

கார்த்திகைப் பெண்கள் பூவுலகத்துக்கு வந்து சரவணப் பொய்கைக் கரையில், முருகனின் அவதாரத்தை எதிர்பார்த்துத் தவமிருந்தனர்.

ஒழுக்கம் தளர்ந்ததும் அன்பு நஞ்சாக மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு அக்கினிப் பொறிகள் தோன்றின. ஆறு பொறிகளையும் வாயுவும் தேயுவும், கங்கையும், சரவணப் பொய்கையில் சேர்த்தனர். அவை, சோதிப் பிழம்பே திருமேனியான ஒரு உருவமாக, ஆறு முகங்களும், பன்னிரு கரங்களும் கொண்ட ஒரு உருவமாகத் தாமரை மலரில் தவழ்ந்தது. ஆறு குழந்தைகளும் ஓர் உருவமாக இருப்பதால், யார் அதை எடுப்பதென்று தெரியாமல், அதிசயித்துத் துதி செய்து வணங்கினர். துதி செய்ததும் ஆறு குழந்தைகளாகப் பிரிந்து, ஆறு தாமரை மலரில் வீற்றிருந்தனர்.

கார்த்திகை மாதர் அறுவரும், ஆளுக்கொரு குழந்தையை எடுத்து, அன்புடன் அணைத்துப் பாலூட்டி வளர்த்துப் புனிதராயினர். சரவணப் பொய்கைக்கு அம்பிகையுடன் எழுந்தருளிய சிவபிரான், கார்த்திகைப் பெண்களை நோக்கி, ''நம் புதல்வனை நீவிர் அன்புடன் பாலூட்டி வளர்த்தமையினால், அவனுக்குக் 'கார்த்திகேயன்' என்னும் திருநாமம் வழங்குவதாக, உங்கள் தினமாகிய கார்த்திகையில் முருகன் திருவடியை அன்புடன் வழிபடுவோருக்கு, நாம் இக பர நலன்களை அருளுவோம் என்று வரம் கொடுத்து அவர்களை விண்ணுக்கு ஏகுமாறு விடை கொடுத்தருளினார்.

ச. கு. கிருஷ்ணசாமி

**'என்தெய்வம்' உன்தெய்வம், என்று**

ஒரு நாள் பூனைக்கூட்டத்தின் அருகில் ஒரு நாய் வந்து நின்றது பக்கத்தில் அதுநிற்பதைக் கவனிக்காமல் பூனைகள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தன.

கூட்டத்தில் ஒருபெரிய பூனை எழுந்து நின்று மற்றை அனைத்தையும் பார்த்துச் சொன்னது: ''சகோதரர்களே! பிரார்த்தனை செய்யுங்கள். நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்தால், நிச்சயம் எலிக்குஞ்சுகளாக மழை பொழியும்.''

இதைக்கேட்ட நாய் உள்ளூரச் சிரித்துக்கொண்டது. ''குருட்டு முட்டாள்ப் பூனைகளே! நூல்களில் எழுதியிருப்பது என் முன்னோர்களுக்கும் நன்றாகத்தெரியும். பிரார்த்தனைக்கும் நம்பிக்கைக்கும் சரண் அடைவதற்கும் பெய்யும்மழை, எலும்புத் துண்டாக இருக்குமேதவிர, எலிக்குஞ்சுகளாக இருக்காது!'' என்று கூறிச்சென்றது. அறிவுள்ளநாய்!

இறைவனை மக்கள் தங்கள் மனோநிலைக்கேற்ப அணுகுகிறார்கள்

ஒழுக்கு முறையின் சாரம் அகிம்சை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறி

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியும், மற்றவர் அறியா மாணிக்க மலையும் ஆகிய இறைவன் சொரூப நிலையில் 'சிவம்' என்றும், உலகை நோக்கிய தடத்த நிலையில் 'பதி' என்றும் பேர் பெறுகிறான்.

இறைவனைப் பற்றியும், உயிர்களின் தன்மை பற்றியும் உயிரின் இயற்கைக் குற்றமாகிய ஆணவத்தைப் பற்றியும் நமது சைவ சித்தாந்த நூல்கள் தாம் தெளிவாகக் கூறுகின்றன. ஏனைய நூல்களில் ஆணவத்தின் பேர்தானும் கூறுவாரில்லை.



அத்வைதம், அத்வைதம் என்ற சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கண்டார்கள். திருவருள் துணை செய்யாமையால் மற்ற மதாசிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிக் குழப்பம் செய்தார்கள்.

'ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரஹ்ம' என்பது வேத வாக்கு. இதன் பொருள் ஒன்றேதான் பொருள்; இரண்டாவது இல்லை என்பது. இதை வைத்துக்கொண்டு சங்கரர் முதலியோர், பிரமத்தையன்றி வேறு பொருள் இல்லை என்று முடிவுகட்டி விட்டார்கள்.

பிரமத்தைத் தவிர வேறு பொருளே இல்லையானால் இதனை யார் யாருக்குக் கூறுவது, இந்த வாக்கியத்தினால். சொல்பவன் ஒருவன், கேட்பவன் ஒருவன் இருக்க வேண்டும் அன்றோ? பிரமமே மயங்குகிறதா? பிரமத்தைத் தவிர வேறு பொருள் இருந்தால்தானே இந்த வசனம் உண்டாகும்?

பிரமத்தைத் தவிரத் துணைமைப் பொருள் வேறு இல்லை என்பதே இந்த வேதவசனத்தின் உட்பொருள் என உணர்க. இவ்வுண்மை அறியாது மயங்கி மருண்டார்கள் பலர்.

புத்திசாலித்தனம் தாயிடமிருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந-த்வைதம் என்ற சொற்கள் சேர்ந்து அத்வைதம் என்று ஆயிற்று ந என்ற சொல்லுக்கு, சப்த கல்பத்ருமம் என்ற நூல், ஆறு பொருள் கூறியுள்ளது. அவற்றுள் மூன்று அன்மை, இன்மை, மறுதலை என்பன வாம். இன்மை என்ற பொருளில் அப்பிரகாசம் எனக்கொண்டு ஒன்றே தான் என்றார் சங்கரர். மறுதலை பொருளில் அநீதி, அதர்மம் எனக் கொண்டு, இரு பொருள்கள் என்றார் மத்வர்.

மெய்கண்டார் அப்பிராமணன் பிராம்மண தருமம் கெட்டவன் என்று அண்மைப் பொருளில் கூறியருளினார். 'பொன்னும் மணியும் போல் உலகமும் இறைவனும் ஒன்றே' என அபேதவாதம் கூறினார் சங்கரர். இதில் ஆபரணத்திற்கு வரும் குறைபாடுகள் யாவும் பொன் னுக்கு வரும். ஆதலால் இது பொருந்தாதென உணர்க.

'இறைவனும் உலகமும் ஒளியும் இருளும் போல் வேறுவேறே' என்றனர் மதவர். இது பேதவாதம். இருளும் ஒளியும் பகைப்பொருள் ஆதலால், உலகமும் இறைவனும் தொடர்பில்லாமற் போவதனால் இது பொருந்தாமை அறிக.

பஞ்சராத்திரிகள், ''சொல்லும் பொருளும் போல் பேதாபேதம்' என்பர். சொல்லும் பொருளும் வேறு பொருளாயாதலால், இவர் கூற்றும் பொருந்து மாறில்லை.

சிவாத்துவித சைவர்களும், 'மரமும் கிளையும் போல' என்று பேதாபேதமே கூறி மயங்குவர். அபேத வாதம், பேதவாதம், பேபதா பேதவாதம் என்ற மூன்றுமே பொருந்தா என்றால், உலகத்துக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்புதான் எவ்வகைப்பட்டது?

மேலே கூறிய மூன்றினுள் ஒன்றையே கூறாது, மூன்று தன்மை களும் தன்னுள் காணப்படும் அத்வைதத் தொடர்பே உலகிற்கும் இறை வனுக்கும் உள்ள தொடர்பு என்கிறார் மெய்கண்டசிவம்

எண்ணும் பொருளில் அகரம் அண்மைப் பொருளிலேயே வரும். அ+ ஏகம் அநேகம் என்பதுபோல, அ+த்வைதம் அத்வைதம் என வந்தது.

அத்வைதம் என்பது இரண்டல்லாமை. பிரிவின்மை என உணர்க. பிரிவின்மை என்றதனால் பொருள் இரண்டுதான். இரண்டாயினும் வேறு வேறாய் நில்லாது ஒன்றியே நிற்கும்.

இறைவனும் உலகமும் ஒன்றி நிற்கும் கலப்பினால் ஒன்றாகியும் பொருள் தன்மையால் வேறாகியும், உலகத்துக்கு உதவும் பொருட்டு உடனாகியும் இறைவன் ஒன்றாகி வேறாகி உடனாகி நிற்கிறான்.

★ என்னை நான் உணரவில்லை என்பது ஒரு எண்ணமே. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விரிந்த கருத்துக்களை மெய்கண்டார் சுருங்கிய சொற்களால். 'அவையே தானே யாய்' என்று கூறியுணர்த்துகிறார். அவையேயாய் உயிரும் உடலும் போல் ஒன்றாகியும், தானேயாய்ப் பொருள் தன்மையால் கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும், அவையே தானேயாய் கண்ணொளியும் ஆன்ம அறிவும் போல் உடனாகியும் நின்று இறைவன் அருள் புரிகிறான்.

எனவே, உயிர்களை உய்விக்கும் பொருட்டு இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்கிறான்.

இறைவனுடைய அருட் பெருங்கருணையை நினைந்து நாம் உருகி வழிபாடு செய்தல் வேண்டும். இல்லையேல் நன்றி மறந்த பாவத்துக்கு ஆளாவோம்.

இறைவனுடைய திருவைந்தெழுத்தை இடையறாது ஓதினால் பிறவிப் பெருங்கடலை எளிதில் கடந்து விடலாம்.

சித்தத்தில் இருக்கும் மந்திரம் பஞ்சாட்சரம். சித்திக்கும் முத்திக்கும் அதுவே காரணம். சிவபஞ்சாட்சரத்தை அன்புடன் ஓதும் உத்தமர்க்குத் தரித்திரம் உண்டாகாது. இம்மை மறுமை வீடு என்று மும்மை நலன்களும் உண்டாம்.

'நரகமாகிய கடலைத் தாண்டச் செய்கிறவன் சிவன், தரித்திரமாகிய அக்கத்தைத் தகனம் செய்கிறவன்' என்று வசிஷ்ட முனிவர் சிவபெருமானைத் துதி செய்கின்றார்.

"ஆயிரம் எழுத்தல்ல, பத்து எழுத்தல்ல, ஐந்து எழுத்துத் தானே? இதைக் கூட உச்சரிக்கக் கூடாதா?" என்கிறார் இராமலிங்க அடிகளார்.

நமக்கு இறைவன் தந்த வாழ்நாள் சிறிது. ஒவ்வொரு நாளாகக் கழிந்து கொண்டே போகிறது. நாம் அன்றாடம் தேதித்தாள் கிழிக்கிறோமே? தாளா அது? இல்லை, நம் வாழ்நாள். பொழுது விடிந்து பொழுது போனால் வாழ்நாளில் ஒரு நாள் வீணாகி விட்டது. ஒரு நாளைக்குத் தேதித்தாளை நாம் கிழிக்க மாட்டோம். மனைவி, "தினம் காலண்டரைக் கிழித்துப் பற்பொடி மடிப்பீரே! இன்று கிழிக்கவில்லையே?" என்று கூறி அழுவாள்.

★ அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்தம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு நாளில் கண்ணப்பர் முத்தி பெற்றார் என்று அறிகிறோம். நாமும் அதிதீவிரமாக இறைவனிடத்தில் அன்பு செலுத்தினால் கண்ணப்பர் பெற்றபேற்றை நாமும் பெறலாம்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் யானை பூசித்த தலம் திருவானைக்காவும் எறும்பு பூசித்த தலம் திருஎறும்பூரும் காட்சி தருகின்றன. பெரிய பிராணி யானை; சிறியபிராணி எறும்பு. எறும்பு முதல் யானை ஈறாக என்பார்கள். யானையும் இறைவனை வழிபட்டது எறும்பும் இறைவனை வழிபட்டது. மனிதராகப் பிறந்த நாம் இறைவனை வழிபட வேண்டாமா?

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஆதலால் ஒவ்வொருவரும் சிவபூஜை செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் வேண்டும். திருவெண்ணீறணிந்து, கண்டிகை புனைந்து, ஆலயவழிபாடு செய்தல் வேண்டும். இறைவனிடத்தில் இடையறாத அன்பு செய்ய வேண்டும் மால் என்றால் அன்பு. மால் ஆனார்க்கு அவன் எளியவன். அன்பு செய்வார் நெஞ்சில் நீங்காது நிற்பவன்.

எனவே, என்பும் உருக அன்பு செய்து, எல்லோரும் பாசநீக்கம் பெற்று, சிவமாம் பெற்றி பெறல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், இறைவன் எங்கும் உளன் என்பதும், முருகனும் கணபதியும் சிவனது அத்வைத நிலையைக் காட்டினார்கள் என்பதும். இறைவன் உலகமெங்கும் உறையினும் கடல்மீன் போல் உலக மாயை ஒட்டாதவன் என்பது, தியானத்தால் அவனைக் காணலாம் என்பதும், அத்வைதம் என்ற சொல்லின் உண்மைப்பொருள் இதுஎன்பதும் இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று தண்ணருள் புரிகிறான் என்பதும், பரமனை வழிபட்டு, ஒவ்வொருவரும் உய்தல் வேண்டும் என்றும் சிந்திப்போமாக.

கிருபானந்தவாரியார்

உபகாரம் செய்யாதவர்களுக்கும் உபகாரமே செய்வது; பிரியமாக இருப்பது; செய்நன்றி மறக்காமல் இருப்பது; விழுந்தவர்களைத் தூக்கி விடுவது ஆகியவைகளே நற்குலத்தில் பிறந்தவர்களுக்கு அடையாளங்கள்.

உணர்ச்சி தந்தையிடம் இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# மதி வென்றது

பாண்டவர்களை வாரணாவத நகர மக்கள் மனக்களிப்புடன் வரவேற்று மகிழ்வுற்றிருந்த வேளை மக்களுள் ஒருவனாக நின்று வரவேற்பு வைபவத்திற் கலந்திருந்த புரோசனன் ( பாண்டவர்களை அழித்தொழிக்கும் வண்ணம் வாரணாவத நகருக்குத் துரியோதனனால் அனுப்பிவைக்கப்பட்டவன் ) தானும் பாண்டவர் வருகையினால் மகிழ்வான்போல் மகிழ்ந்திருந்து மலர்ந்த முகத்துடன் பாண்டவர்களை அணுகி, வணங்கி நின்றான். வாரணாவத நகரில் ஓர் சிறந்தமாளிகை இருப்பதாகவும் அதிலே தங்குமாறும் பாண்டவர்களிடம் வேண்டுதல் ஒன்றை விண்ணப்பித்துக் கொண்டான். பாண்டவர்களும் தங்கியிருப்பதற்கான வசதிகள் கொண்ட இடமொன்று அவர்கட்குத் தேவைப்பட்டதனால் புரோசனன் காட்டிய மாளிகையில் தங்கி இருக்க முடிவு செய்தனர். ஆயினும் பாண்டவர்கட்கு அவன் யாரென்பது தெரிந்திருந்த வேளையிலும், அதனை வெளிக்காட்டாது அவனுடன் பழகிவந்தனர். புரோசனன் மிகநல்ல சிந்தை உள்ளவன் போலப் பாண்டவர்கட்குப் பல உதவிகள் செய்து அவர்களுடனே வசித்து வரலானான்.


சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் புரோசனன் பாண்டவர்களை அணுகி "இளவல்களே! தாங்கள் சகலவசதிகளுடனும் வாழ்வதற்கான முறையில் ஓர் புதியமாளிகை அமைத்துள்ளேன். எனவே, தாங்கள் அனைவரும் அப்புதியமாளிகையில் இன்பமாக வாழவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். புரோசனின் வேண்டுகோளை நிராகரிக்க முடியாத பாண்டவர்கள் புதியமாளிகையில் வாழ்ந்திருக்க முடிவு செய்து மாளிகைப் பிரவேசம் மேற்கொண்டனர். மாளிகையினுட் புகுந்ததுமே, அம்மாளிகை அமைக்கப்பட்டிருக்கும் முறையும், வீசிய வாசனையும் பாண்டவர்களைத் திகைக்கவைத்தன. மாளிகையினுள் நெய்யின் மணமும், கொழுப்பின் வாசமும் சேர்ந்து வீசுவதை உணர்ந்தனர். எளிதில் தீப்பற்றும் தன்மை மிக்கதாய் அம்மாளிகை அமைக்கப்பட்டிருந்தமை. யுதிஷ்டிரர் நன்குணர்ந்து கொண்டவராய்ச் சகோதரர்களையும் தாயையும் நோக்கி "இம்மாளிகை

நல்லதையே பேசு அல்லது மௌனமாக இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நாம் வாழும் காலத்தில் எம்மை அழிக்கும் நோக்குடன் இம்மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எளிதில் தீப்பற்றும் பொருட்களான சணல், குங்கிலியம், மூங்கில், அரக்கு என்பன மிகுதியாகச் சேர்த்து இம்மாளிகை நிறுவப்பட்டுள்ளது. இதனை உணர்ந்தே எமது சிறியதந்தையாகிய, விதுரர் எமக்கு எச்சரிக்கை தரும் அறிவுரைகளை நாம் புறப்படும் வேளையிற் கூறி அனுப்பினார். எனவே நாம் மிகுந்த விழிப்புணர்வுடன் வசித்தல் அவசியம்'' என்று இயம்பி நின்றார். அப்போது, பீமன் ''அப்படியாயின் அண்ணா! நாம் இம்மாளிகையை விட்டு நீங்கி வேறொரு இடத்தில் வசிக்கலாமே. இங்கு தங்கவேண்டிய அவசியம்யாது?'' என்று வினாவினான். அப்போது யுதிஷ்டிரர் தம்பீ துரியோதனன் மிகவும் கொடியவன். அரசாளும் அவா அவன் அகத்தில் நெருப்பாய்ச் சுடர்விடுகிறது. அதற்கு நாம்



23 – 05 – 99 சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற வைகாசிப் பெருவிழாவில் '' ஞானபண்டித சேவாசுரபி '' என்ற விருதினை பேரவைப்போஷகருள் ஒருவரும் வல்வைவைதீஸ்வரன் ஆலயபிரதம குருவுமாகிய ப. மனோகரக்குருக்கள் வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை அவர்கட்கு வழங்குவதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

★ அறிவு பெருகும் போது சந்தேகமும் பெருகுகிறது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையூறாக இருக்கிறோம் என்று நினைப்பாட்டினாலே அவன் சூழ்ச்சி செய்து எம்மை இங்கு அனுப்பி இருக்கிறான். அத்துடன் அவனின் கையாட்களில் ஒருவனான புரோசனனையும் இங்கு அனுப்பி எம்மைக் கொல்லத் திட்டமிட்டிருக்கின்றான். இவ்வாறான சந்தர்ப்பத்தில் புரோசனன் அமைத்த இவ்அரக்கு மாளிகையை விட்டு நீங்கி வேறெங்கும் வசிப்போமானால் புரோசனன் மிகவும் சந்தேகப்பட்டு எம்மைத் தீவிரமாகக் கண்காணித்து வெகுவிரைவிலே தான் மேற்கொண்டுவந்துள்ள காரியத்தை முடிக்க முயலுவான். எனவே அவனது செயல்களில் நாம் சந்தேகப்படாதவர் போலி அமைதியாக ஆனால் வெகுவிழிப்புடன் இருந்து நாம் அவனிடம் இருந்து தப்புதல் வேண்டும். அவனை நம்பியே வாழ்பவர்கள் போல் நாம் நடந்துகொள்ளவேண்டும். அத்துடன் மாளிகையை அடுத்துப் பின்புறம் உள்ள அடர்ந்த வனங்களில், நாம் சஞ்சரித்து, பாதைகளை அறிந்து வைத்திருக்கவேண்டும். அத்துடன் எமக்கு நம்பிக்கை தரக்கூடிய ஓர் மனிதனைத் தேடிக் கண்டுபிடித்து அவன் மூலம் மாளிகையில் இருந்து நாம் தக்கசமயத்தில் வெளியேறும் வகையில் ஓர் சுரங்கப்பாதை அமைக்கவேண்டும். இவையே நாம் கைக்கொள்ளத் தக்க வழிகளாம் எனவே, சுரங்கம் அமைக்கும் பணியை நாம் வெகுவிரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறிமுடித்தார். தமையனாரிய யுதிஷ்டிரர் சொன்ன வார்த்தைகளை ஏற்று, எல்லோரும் அம்மாளிகையில் வசித்து வந்தனர். புரோசனனும் அவர்களுடன் தங்கியிருந்து அவர்களின் தேவைகளைக் கவனித்து வந்ததுடன் தக்கசந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

(தொடரும்......

சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்

நூலகர்
வலிவடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை
(மல்லாகம்)

எனது எந்தச்செயலும் பிரார்த்தனையின்றி நடைபெறுவது இல்லை. உடலுக்கு உணவு தேவையாய் இருப்பதைப் போன்று ஆன்மாவிற்குப் பிரார்த்தனை தேவைப்படுகிறது. கொஞ்ச நாட்களுக்கு மனிதன் உணவு இல்லாமல் கூட உயிர் வாழலாம். ஆனால், கடவுள் நம்பிக்கை கொண்டும் மனிதன் ஒரு கணம் கூடப் பிரார்த்தனையின்றி உயிர் வாழ இயலாது.

காந்தியடிகள்.

வெற்றியோ தோல்வியோ நீ நல்ல முறையில் செயலாற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையின் கொடுமுடி தாய்

[ தொடர்ச்சி ............

உண்மையை உணர்வதற்கு மனத்திலே நிலையாக நினைந்து இரங்குகின்ற ஆற்றாமை ஏற்பட வேண்டும். மனிதன் தனக்குத்தானே இரக்கமுள்ளவனாக இருப்பான். அவனே அன்மை ஈன்ற அருளாளன் அவனேதான் குறை நிவிர்த்தி வேண்டி அழுது நிறைவுறுவான். உலகை உயர் குறிக்கோளுக்கு அழைத்துச் செல்வான்

பிள்ளைகளைப் பெறுவதில் ஒருவன் தந்தையாகி விடமாட்டான். அதைப்போல் குற்றங்களை வெளிப்படுத்தி அழுவதனால் மட்டும் ஒருவன் ஞானியாகி விடமாட்டான். குற்றங்களை முற்றும் களைந்து குணங் களை வளர்ப்பவனே உண்மையான அறிஞன் உலகிற்குரிய ஞானி.

சொல்லி அழுதால் உள்ள குறை தீரும் தூய்மையான நெஞ்சின் அன்புக்கு உள்நோக்கம் எதுவும் இல்லை அறியாமை நோக்கம் எதுவும் இல்லை.

அன்பு நிலைதனிலே நேர்மையை அறிவதும் கடபுலனாற் காண ஒண்ணாக் கடவுளை உட்புலனாற் காணுவதும் தன்மானம் தன்னாலும் வாழ்வதே, வாழ்வின் இன்பம் என்பர் இடைக்காட்டுச் சித்தர்.

ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதியை எல்லா உலக மும் எல்லா உயிர்களும் எல்லாப் பொருள்களும் எண்ணரிய வல்லாளன் ஆதிபரம சிவனின்.

மண்ணாதி பூதங்கள் ஐந்தையுங் கண்டேனே
மாயா விகாரங்கள் யாவையுங் விண்டேனே
விண்ணொளி மொழியை மெய்யினுட் கொண்டேனே
மேதினி வாழ்வினை மேலாக வேண்டேனே

வானவெளிபோல் விளங்கும் ஆகாச வெளியை பிரம்மம் நிறைந்த சூனியத்தை ஏத்தாமல் போற்றாமல் விட்டுவிட்டால் ஊனாற் பொதியப் பட்டு உள்நின்று இயங்கும் ஆவிக்கு ஒருகதியில்லை என்று ஆராய்ந்து தெளிந்து கொள்வீர்.

---

★ கடுமையான உழைப்பே வெற்றிக்கு வழி. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது
முத்திக்கு உறுதி செய்யாக்கால்
சித்தியும் பக்தியும் சத்தியும் முத்தியும்
கைகூடாமற் போகும் என்று
தாண்டவக்கோனார் அறுதியிட்டுக் கூறுகிறார்.

நாமென்று சொல்லுவார் சொப்பனத்திற் காம
சன்னதம் வந்தால் நினைப்பாரோ?
வாய்கொண்டு வேதம் படித்தாலும் சுத்த
மௌனம் தங்குமோ ஞானப்பெண்ணே.

தாடி வளர்த்தும் சடை வளர்த்தும் நல்ல
சந்நியாசி என்றொரு வேடமிட்டே
ஓடித்திரிந்த விளையாட்டை இங்கே
ஒப்புவதாரடி ஞானப் பெண்ணே!

இறைவன் சகல சீவராசிகளையும் உற்பத்திசெய்வதற்கு தாய்தந்தையர் என்ற பெயரில் வேடம்தாங்கி அன்பெனும் பாசப்பிணைப்பால் இறுகக்கட்டி, பாசம் என்ற மும்மலங்களுக்கு அப்பாற்பட்டுச் செயற்பாட்டை, செய்கின்றான்.

பரப்பிரம்மம் சகல உலகிற்கும் தாயாய் விளங்கும் சக்தியின் அருட்கடாட்சமின்றித் தனியே செயற்பட முடியாது.

## திருவாலவாய்க் கட்டளை இரண்டாவது

## பசு இலக்கணம் (ஆன்மா)

ஆன்மாக்கள்:- விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனமூவகைப்படும்.

### விஞ்ஞானகலர்

விஞ்ஞானகலர், அட்டவித்தியேசுரர், அநுபசதாசிவர் சத்தகோடி மகாமந்திரர் இவர்கள் ஆணவமலமொன்றே உடையவர்கள் இவர்களுக்குச் சுத்தமாயா தத்துவம் தனுகரண புவன போகமாயிருக்கும் இவர்களின் பக்குவர்க்குப் பரமசிவம் அநுக்கிரகிக்கும் முறையாவது அறிவின்றுந் திருவருள் திட்டித்து ஆணவமலத்தைப் போக்கி இரட்சிப்பதாம்.

அன்பற்ற வாழ்க்கை சாவுக்கு ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரளயாகலர்

பிரளயாகலர் - நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களும் புவனகர்த்தாக்களுமாயிருப்பர். இவர்கள் ஆணவம் கன்மம் ஆகிய இரண்டுமலமுடையவர்கள் இவர்களுக்கு அறிந்த மாயாதத்துவம் தனுகரண புவன போகமாயிருக்கும் இவர்களில் பக்குவர்க்கு அநுக்கிரகிக்கும் முறைமையாவது அந்தப் பரமசிவம் மான் மழு சதுர் புயம் காளகண்டம் திரிகேந்திரங்களோடு திரிமேனி கொண்டெழுந்தருளி இருமலத்தைப் போக்கி இரட்சிப்பதாம்.

## சகலர்

சகலர்:- பிரம்மா விஷ்ணு முதல் கிருமியீறாகவுள்ளனர். இவர்கள் ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மூன்று மலமுடையவர்கள் இவர்களுக்குப் பிரகிருதி தத்துவம் தனு, கரணபுவன போகமாயிருக்கும்.

இவற்றுள்:- தனுவாவது:- சராயுடம் அண்டசும் சுவேதசம் உற்பிச்சம் ஆகிய நால்வகை யோனிகளிலும் பிறப்பதாய்த் தேவர் பதினொரு நூறாயிரம் மானுடர் ஒன்பதுநூறாயிரம் தாவரம் பத்தொன்பது நூறாயிரம் மிருகம் பத்து நூறாயிரமும், நீர்வாழ்வன பத்து நூறாயிரமும் ஊர்வன பதினைந்து நூறாயிரமும் ஆகிய எழுவகைத் தோற்றத்திலும் எண்பத்திநான்கு லட்சம் யோனி வேதமாயிருக்கும். அத்தது ஸ்தூலமாகவும் சூக்குமமாகவும் காரணமாகவும் இருக்கும் அவைகளுக்கு ஆயுசுகளின் முதலாக அனேகமுள.

கரணமாவது : அத்தநுவுக்கேற்ற நாநா விதங்களாயிருக்கும்

புவனமானது இருநூற்றிருபத்து நான்கிலுமுள்ள ஊரும் நாடும் தேயமுமாய்ப் புண்ணிய கன்ம முடையவர்களுக்குச் சுவர்க்காதி பதங்களுமாயிருக்கும்.

போகமாவது:- அவரவர் கன்மத்துக்கேதுவான உண்பன, தின்பன, குடிப்பன, கடிப்பன, நக்குவன, விழுங்குவன, உடுப்பன, முடிப்பன பூண்பன, பூசுவன, கொடுப்பன வாங்குவன. கேட்பன காண்பன, நடப்பன படுப்பன, பெண்டுபிள்ளை, சுற்றம் பொன்மணி இவை முதலிய பிரபஞ்சமாயிருக்கும்.

இனி இவர்கள் சூக்குமதேகத்தைப் பொருளின் கன்மத்துக்கிடாகிய தூலதேகமெடுத்து எடுத்ததேகமே தானாய்ப் புண்ணிய பாவங்களை ஆக்குகிறது சுவர்க்க நரகங்களிலே போக்கு வரத்து உடைத்தாயிருப்பர்.

---

★ அமைதியைவிட மேலான ஆனந்தம் வேறெதுவுமில்லை. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் பக்குவர்க்கு அநுக்கிரகிக்கும் முறைமை எங்ஙனமெனின் மலபரிபாகம் வந்தவிடத்து இருவினையொப்புப் பிறக்கும். அப்பொழுது முன் செய்த சிவபுண்ணியம் வந்தெய்த அப்பரமசிவம் மானைக்காட்டி மானைப்பிடிப்பது போல ஞானாசாரிய மூர்த்தமாய் மான், மழு, காளகண்டம், திரிநேத்திரமொழித்து மானுடச்சட்டைசார்த்தி இவனது ஊரும், பேரும் உருவும் ஒழிக்க வேண்டி ஊரும், பேரும், நீ ரூபமும் என்னும் சத்திநிபாதத் தன்மையுணர்ந்து சமய தீக்ஷைபண்ணி ஞானமனுக்கிரகித்து, மலமாயாதி கன்மங்களை நீக்கி மோட்சத்தைக் கொடுக்கும்.

ஆன்மாக்களின் பரியாய நாமங்களாவன :- பசு, சீவன், புருடன் புமான் சேதி, கிஞ்சிக்ஞன், சுதந்தரவீனன், பரதந்திரன், அகர்த்தா, அணு, அறியாதவன் உள்ளம்மை தன்மான், பிரகிருதி, புத்தி, பிராமணன் சரீரத்து புட்கலன் முதலியன.

நால்வகை ஆன்மபேதமும் சரீரத்தையடைந்து காரியப்படும் முறைமையும் அநுக்கிரகம் பெறும் முறைமையுங்கண்டு கொள்க.

பசுவிலக்கணம் முற்றிற்று

திருவாலவாய்க் கட்டளை தொடரும் ...........

'சிவம்'

மொழிதான் வழிபாட்டின் மூலதனம். மொழியின்றேல் மனிதனுக்கு எவ்வளவும் ஆற்றலே இருக்காது. மொழியுடன் கூடிய வழிபாடும் சொற்களற்ற வழிபாடும் இறைவனிடம் மனத்தை இணைக்கும் குரலாகும்.

சித்தர் பொன்மொழி.

நடந்ததற்குப் பிறகு முட்டாளும் புத்திசாலிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# உருள் பூந் தண்தார் புரளும் மார்பினன்

தண்தார் புரளும் மார்பினன்:-

முருகப்பெருமான் மாலை அசையும் மார்பினர். குளிர்ந்த மாலை அசையும் மார்பினர். தேர் உருள் போலும் பூவாற் செய்யப்பட்ட குளிர்ந்த மாலை அசையும் மார்பினர். செங்கடம்பினது தேருருள் போலும் பூவாற் செய்யப்பட்ட குளிர்ந்த மாலை அசையும் மார்பினர். மார்பில் மாலை அணிவது இயல்பு. அதிசயம் இல்லாத நிகழ்ச்சி ஒன்றிற்கு அழுத்தம் கொடுத்துச் சொல்லுவதற்குக் காரணம் உண்டு. தெய்வம் தெய்வம் அல்லாதவர் அணியும் மாலையினுக்கும் முருகப்பெருமான் மார்பில் அசையும் மாலைக்கும் அநேக வேறுபாடு உண்டு. குமரப் பெருமான் மார்பில் அசையும் மாலைக்கான செங்கடம்பு சாதாரண மானது அல்ல. அது கிடைக்கும் தன்மையை நக்கீரர் சங்கத்தமிழ் நடையில் பாடும் அழகு இனிமை இருக்கிறதே அது ஒரு தனியான தமிழ்ச்சுவை. அது எக்காலமும் தெவிட்டாத தெள்ள அமுதத் தேன் துளி சொட்டிக் கொண்டிருப்பது.

முகில் கடல்நீரைப் பருகுகின்றது. வயிறு நிரம்பிய நிறைவினைப் பெற்றுக்கொள்கின்றது. சூலினையுடைய பெருமையைக் கொண்டது. திங்களும் ஞாயிறும் இருளை நீக்கும் ஆகாயத்தில் நீர்த்துளிகளை முற்படச் சிதறுகின்றது. கார் காலத்தில் முதற் பெய்தலைக் காட்டிட மாகச் சொரிந்தது. தண்ணிய நறிய காடு இருட்சியுண்டாகத் தழைத்த செங்கடம்பு நெருங்கியது. கடம்ப மரம் பரிய அடியினைக் கொண்டது செங்கடம்பினது பூக்கள் வட்டவடிவமானது. தேர் உருள் போன்றது. தேருருள் போன்ற அப்பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை முருகப்பெரு மானுடைய மார்பில் அசையா நிற்கும்.

சங்க காலத்தில் சமைத்த பரிபாடலும் அதை வலியுறுத்தும்; ''தேர்உருள் போன்ற பூக்கள் மலிந்த கொத்தினையுடைய கடப்பமலர் மாலையினையுடைய பெருமானே அதை; உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரேயே'' என்பர்.

---

★ பசியால் வாடும் வயிற்றுக்குக் காதுகள் கிடையாது ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவ ளியவெளியினளார்.

வாய்மை திறம்பா எங்கள் வாகீசமுனிவரும்

“நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்”

என்று வாய்மொழியச் செந்தமிழால் செவிப்பார்.

“இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்”

என்பர் நக்கீரர் (திரு. வரி 10 / 11)

தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு நன்றாக இறைவன் படைத்த திருமூலருக்குப் பின் ஆயிரம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் அவதரித்த ஆளுடைய பிள்ளையார் தமது வழிநடை வழிபாட்டில் திரு ஆவடுதுறையை அடைந்த போது தமிழ் மணம் கமழப்பெற்றார் அல்லவா?

அது போன்று நக்கீரருக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வந்த அருணகிரிநாதருக்கு முருகப் பெருமானுடைய மார்பில் புரளும் தண்தார் நறுமணம் நுகரப்பெற்றார். அதனால் அன்றோ திருப்புகழ் வாயிலாக அம்மாலையைத் தரும்படி நாவ என்று மார்தட்டும் பெருமையிடத்தில் யாசிக்கின்றார்.

“மால்கொண்ட பேதைக்குன் மணநாறும் மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே. (திருப்புகழ் )

காந்தட் கண்ணி பிணைந்த சென்னியன்:-

முருகப் பெருமானுடைய திருமார்பில் தண்தார் புரள்வது போன்று திருமுடியில் பெரிய குளிர்ந்த செங்காந்தள் கண்ணி விளங்கும்.

காந்தள் பெருந்தண் கண்ணி பிணைந்த சென்னியன் என்பார்.

காந்தள் திருமுடியில் ஏறுதலின் அருமையும் சிறப்பும் இருக்க வேண்டும் அல்லவா? திருமுருகாற்றுப் படையில் 12 முதல் 44 வரி வரையில் காந்தளின் பெருமையை வர்ணிப்பார்; அதன் உட்கிடக்கையின் சுருக்கம் பின்வருமாறு அமையும்.

ஒருவர் எப்போதும் விவேகம் பழக வேண்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வளர்ந்த சிறந்த மூங்கில் தேவர் உலகுவரை செல்ல உயர்ந்ததாக மலை விளங்குகின்றது. சூரர மகளிர் மலையிடமாகக் கூட்டமாக வந்து குழுமுவார்கள். அவர்கள் யாவரும், ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப் பெறுகின்ற அழகினையுடையவர். அதுவே

''கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு'' எனப் போற்றப்படும்.

சூரரமகளிர் சிவந்த சிற்றடியினர், பிரகாசிக்கும் சிற்றடியில் சிறு சதங்கை சூழ்ந்திருக்கும். கால்கள் திரண்டு காணப்படும்.



நல்லை ஆதீனமுதல்வர் தலைமையில் 1999-ம் ஆண்டு நடைபெற்ற வைகாசிப் பெருவிழாவில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் உரையாற்றுவதையும், அவர் அருகே ஆதீனமுதல்வர் பரமாச்சாரிய சுவாமிகளும், வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளையும் அமர்ந்திருப்பதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

★ நேர்மையானவர்களிடம் தான் அதிகபணிவு இருக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைந்து நுடங்கும் இடையினர். பொன்னின் போன்ற மேனியினர் இந்திரகோபம் ஒத்த நிறம் தோயாத பூந்தொழிலுடைய சிவந்த துகிலினர்.

பலமணிகள் கோர்த்த ஏழுவடமாகிய மேகலையை அல்குலை மறைத்து அணிபவர்

சாம்பூநதம் என்று நாவலோடு இணைந்த பெயர்பெற்ற பொன்னால் ஆன பூண்கள் பூண்பவர்.

சிவந்த காலையுடைய சிறிய வெட்சிப் பூக்களை இடைப்பூவாகத் தூவி, குவளையினது தூய இதழ்களைக் கிள்ளிவிட்டு சீதேவி என்னும் தலைக்கோலம் அணிவர். வலம்புரிச் சங்கு வடிவாகச் செய்த தலைக் கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தில் சூடுவர்.

மணம் கமழும் அழகிய நெற்றியில் திலகம் இடுவர்.

சுறவின் அங்காந்த வாயாகப் பண்ணின தலைக்கோலத்தையும் தாங்குபவர்.

வேண்டுவன கூட்டி முற்ற முடித்த குற்ற மற்ற கொண்டையில் பெரிய குளிர்ந்த சண்பகப் பூவைச் சொருகுவர்.

அதன் மேல் கரிய புறவிதழினையும் மெல்லிய துய்யினையுமுடைய மருதினது ஒள்ளிய பூங்கொத்துக்களை அணிவர்.

பச்சென்று அரும்புகளினின்றும் கட்டிய மாலையை வளைய வைப்பர்.

வளர்ந்த காதில் அசோகினுடைய ஒள்ளியதளிர் நுண்ணிய அணிகலன் விளங்கும் மார்பினிடமாக அசையா நிற்கும்.

சந்தனக் குழம்பை மணம் நாறுகின்ற கோங்கின் அரும்பை ஒத்த தனங்களில் அப்புவர். ஈரம் புலர்வதன் முன் வேங்கைப் பூவின் நுண் தாதை அதன்மேல் அப்பிவிடுவர்.

விளாவின் இளந்தளிரைக் கிள்ளி அழகுஉற ஒருவர்மேல் ஒருவர் தப்பாமல் பட்டுத் தெறிப்பர்.

இத்தன்மைத்தான தெய்வ அணங்கினர் வெற்றியையுடைய மேலாய் நின்ற கோழிக்கொடி நெடுங்காலம் வாழ்க என்று வாழ்த்து எடுப்பர்.

வாழ்க்கையிலே தான் இன்பம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு பாடுவர்.

சூரர மகளிர் கூடிச் சோலை நிறைந்த சிறந்த மலை எங்கும் ஆரவாரிக்கப் பாடியும் ஆடுவர்.

மரம் ஏறுந் தொழிற் சிறப்புடையன மந்திகள். மரங்களின் உயரத்தால் மந்திகளும் ஏறி அறியாத மரங்கள் நெருங்கிய சோலைமலைச் சாரலில் காந்தள் காணப்படுவன. அச்செங்காந்தள் சுரும்பு இனமும் சூழாத நெருப்புப் போலும் பூக்களோடு பொரிவன.

முருகப்பெருமான் காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணி சூடிய திருமுடியினன்,

முருகப்பெருமானுடைய தொல்லுருவை இவ்வாறு சொல்லுருவில் பல்லோரும் அறியப் பகர்வார் சீரடியார், "சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன் -" (திருமுரு-43-45)

கச்சியப்ப சிவாசாரியர், பொய்யடிமையில்லாத புலவர்கள் வரிசையில் நக்கீரரை முன்வைப்பார்; 'பொய்யற்ற கீரன் முதலாம்புலவோர்' என்று நக்கீரரின் நற்புலமையை நன்குணர்தாராதரின், காந்தளஞ் சென்னியன் கடவுமாமயில்" என மயில் மேல் அழகனைப் போற்றுவார்.

"காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்" என்பதனால் அடையாளப் பூக் கூறினார்.

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட் டயர்ந்த காந்தளும் - (தொல் பொரு 60 தெய்வத்திற்குச் செய்யுங் கடன்களை அறியுந் சிறப்பினையும் வேலன் தெய்வமேறியாடுதலைச் செய்த காந்தளும்' என்பதனால் அறியலாம்.

அடையாளப் பூ— ஒருவர்க்கே உரிய பூ. கொன்றை மாலையைச் சிவபெருமானுடைய அடையாளப் பூவென்பர்.

(உ. வே. சாமிநாதையர் உரைக்குறிப்பு)

சிவ. சண்முகவடிவேல்

---

★ வீட்டில் குழந்தைகள் போல தோட்டத்தில் மலர்கள். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தெய்வங்களாக மதிக்கப்பட்டனர்

- சிறப்புக்கட்டுரை -

**உலக ஆசிரியர் தினம்**

**ஒக்டோபர் - 6**

இந்துசமய பாரம் பரியத்தில் மிகச் சிறப்பான இடம் குருவிற்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. குருவிடம் கல்வி கற்ற மாணாக்கர் மட்டுமல்ல சமுதாயத்தில் உள்ள அனைத்துப்பிரிவினரும் குருவிற்கு தனி இடம் கொடுத்து அவரை மதித்து வந்துள்ளனர்.

குரு - சிஷ்யர் என்ற நிலைமாறி ஆசிரியர் - மாணவர் என்ற வகையிலே இன்று உறவு காணப்படுகிறது. இங்கே குருவும் ஆசிரியரும் ஒரே செயற்பாட்டை நிறைவேற்றுபவர்கள் - அதாவது அறிவை புகட்டுபவர்கள் என்று மேலோட்டமாக கூறினாலும் குருவினுடைய பாத்திரப் படைப்பிற்கும் அவருடைய செயற்பாடுகளுக்கும் ஆசிரியருடைய பாத்திரப்படைப்பிற்கு அவருடைய செயற்பாடுகளுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. குரு தன்னுடைய மாணவர்களுக்கு அறிவைப் புகட்டியது மட்டுமன்றி தனது வாழ்க்கை முறையால், தனது முன்மாதிரியினால், தனது எடுத்துக்காட்டுக்களினால் தனது மாணவர்கள் தன்னைப் பின்பற்றி செயற்படுமாறு நடந்து கொண்டார்.

ஆனால் ஆசிரியர் என்ற பாத்திரத்தை இன்று வகிப்பவர்கள் மாணவர்களுக்கு அறிவைப்புகட்டினாலும் குருவினுடைய மாணாக்கரை பின்பற்றச்செய்யும் அம்சங்களை முழுமையாக செயற்படுத்தும் வகையில் நடந்துகொள்ளவில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் நல்ல ஆசிரியர் என்று கல்வியியலாளர்களும், சமூகமும் எதிர்பார்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆசிரியர் குருவினுடைய பெருமளவு இயல்புகளை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்று இன்றும் சமுதாயம் எதிர்பார்ப்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்களாக நாட்டை வழி நடத்தப் போகின்றார்கள். ஆகவே இந்த மாணவர்களுக்கு நல்ல அறிவும் ஆற்றலும் மட்டும் இருந்தால் போதாது நல்ல பண்பும், நடத்தையும் அவசியம் என்பதை எமது சமுதாயம் மட்டுமன்றி, சர்வதேச சமுதாயமே ஏற்றுக்கொள்கின்றது.

ஆகவே ஆசிரியர்கள் தனியே அறிவை மட்டும் புகட்டுவதுடன் நின்று விடாது ஒழுங்கு, ஒழுக்கம், பெரியோரை மதித்தல், நல்ல பழக்க வழக்கம் மற்றும் தேசப்பற்று போன்ற அம்சங்களையும் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய எதிர்பார்ப்புக்களை எமது ஆசிரியர் சமூகம் அண்மைக் காலம்வரை சிறப்பாக நிறைவேற்றி வந்துள்ளதை மறந்துவிட முடியாது.

நிறுவன ரீதியானது :-

எமது நாட்டில் ஐரோப்பியருடைய வருகையைத் தொடர்ந்து கல்வியின் நோக்கமும், கல்விச் செயற்பாடுகளும் மாற்ற மடையத் தொடங்கியதுடன் கல்வி நிறுவன ரீதியான அமைப்புக்குட்பட்டதாகவும் மாற்றமடைந்தது. இங்கே குரு வகித்த பாத்திரத்தை ஆசிரியர் வகிக்கத் தொடங்கினார் ஆனாலும் குருவினுடைய இயல்புகள் பல வற்றை ஆசிரியரும் பின்பற்றி வந்தமை மிகவும் வரவேற்கத்தக்க ஓர் அம்சமாக விளங்கியது.

இவ்வாறு கல்வித்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வந்தாலும் ஆசிரியத் தொழில் சேவை நோக்கம் கொண்ட தொழிலாகவே எமது சமுதாயத்தில் பின்பற்றப்பட்டு வந்தமையால் நல்ல ஆசிரியருக்குரிய பண்புகள் அதிகமான ஆசிரியர்களிடம் தொடர்ந்தும் காணப்பட்டு வந்தன ஆனால் தற்பொழுது ஆசிரியத்தொழிலை புனிதமான தொழிலாக நினைத்துச் செயற்படுகின்ற தன்மையும், புனிதமான தொழிலாக நினைத்துச் செயற்படுகின்றவர்களின் எண்ணிக்கையும் அளவில் குறைந்திருப்பதை மறக்கமுடியாது.

பாடசாலைக் கல்வியுடன் தனியார் கல்வியும் சமூகத்தில் இடம் பெற்றிருக்கின்ற இன்றைய சூழலில் ஆசிரியர் - மாணவர் உறவு எப்படிப் பட்டதென்று கூறுவது கடினமாகவே உள்ளது. இது சமகால அபிவிருத்

அருளின் மிக உயர்ந்த வடிவமே மௌனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியடைந்த ஐரோப்பிய நாடுகளில் உள்ள உறவைவிட மோசமானது என்றே கருதத்தோன்றுகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஆசிரியர் - மாணவர் உறவு இரு நண்பர்களுக்கிடையே உள்ள உறவுபோல காணப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் மாணவர்களை கடுமையாகக் கண்டிப்பதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ வாய்ப்பில்லை.

ஆனால் ஆசிரியர் — மாணவர் நெருக்கமான உறவு கல்வியின் நோக்கங்களை அடைவதற்கு ஒரு சாதகமான அம்சமாக உள்ளது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் தற்பொழுது ஆசிரியர் — மாணவர் உறவு நெருக்கமற்றதாகவும், சந்தேகப் பார்வை உடையதாகவும், உறுதியான அன்போ, உறுதியான கண்டிப்போ அற்றதாகவும் உள்ளது. இத்தகைய ஒரு குழப்பமான ஆசிரியர் — மாணவர் உறவு கல்வியின் நோக்கங்களை அடைவதற்கோ அல்லது எதிர் காலத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கோ எந்த வகையிலும் பயன்படப்போவதில்லை.

இன்று பல்வேறு துறைகளில் சமுதாயத்தின் உயர் நிலையில் இருக்கின்ற பெரியோர்கள் பலர் தமது காலத்தில் தமக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக இருந்து கல்வியுடன் சேர்த்து, நல்ல பழக்க வழக்கங்களையும் போதித்தனர் என்பதை நன்றியுடன் நினைவு கூறுகின்றனர். தாம் ஆசிரியர்களை தெய்வங்களாகவே மதித்ததாகவே அவர்கள் கூறுகின்றனர். இத்தகைய கருத்துக்களை இன்று ஆசிரியத்தொழிலை மேற்கொள்வோர் கருத்தில் எடுத்துச் செயற்படுவது விரும்பத்தக்கது.

குரு பக்தி :-

அயோத தௌமியர் என்ற குருவினை நாடிப் பலதரப்பட்ட மாணவர்கள் குருகுலத்திற்குச் சென்று கல்விகற்று வந்தனர். அவர்களில் ஆருணி என்ற பாஞ்சால ராஜகுமாரனும் ஒருவனாக விளங்கினான். ஒரு நாள் அவனிடம் குருநாதர் "ஆருணி நமது குலத்திற்குச் சொந்தமான வயலில் தண்ணீர் பெருகிப் பயிரை அழிக்கின்றது. அதனால் நீ போய் மடையை அடைத்து வா" என்று கட்டளையிட்டார்.

ஆருணி பெரும் செல்வத்தில் பிறந்து செல்வமாக வளர்ந்து அரசகுமாரனாக இருந்தாலும் குருநாதருடைய கட்டளையைச்சிரமேற்கொண்டு மண்வெட்டியைத் தூக்கிச் சென்று மடையை அடைக்க முயற்சிக்க அது முடியாது போகவே இறுதியில் தானே தண்ணீரை எதிர்த்து மடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துத் தண்ணீரைத் தேங்கச்செய்தான். பின்புஇரவு சென்றும் திரும்பாத ஆருணியை குருநாதர் வயலுக்குத்தேடிச்சென்று மீட்கும் நிலைஏற்பட்டது. இங்கே ஒரு தூயமாணவனின் உயர்ந்த குருபக்தி வெளிப்படுகின்றது.

இத்தகைய ஒரு புனிதமான, உயர்வான ஆசிரிய - மாணவ உறவு களே எமக்கு இன்று அவசியமாக உள்ளது இந்த உறவுகள் இன்று பெருமளவு மாற்றமடைந்து விட்டாலும் இலைமறைகாயாக நல்ல ஆசிரியர்களாக செயற்பட்டுக்கொண்டிருப்பவர்களை இனங்கண்டு அவர்களைக் கௌரவித்து எமது முன்னோர்களால் சமுதாயத்தில் எந்தளவு உயர்ந்த இடம் வழங்கப்பட்டதோ அதே அளவு உயர்ந்த இடத்தை இன்று சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினரும் வழங்குவதன் மூலம் நாம் அவர்களை மேலும் ஊக்கப்படுத்த முடியும்.

அத்துடன் நல்ல ஆசிரியர்களின் எண்ணிக்கையை மேலும் சமுதாயத்தில் அதிகரிக்கவும் இது காரணமாக அமையும். உலக ஆசிரியர் தினத்தின் ஒட்டுமொத்தமாக ஆசியர் சேவையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் சமுதாயத்தை கௌரவிக்கின்ற அதே நேரம் நல்ல ஆசிரியர்களை இனங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதும் அவசியம்.

ஒக்ரோபர் ஆறாந் திகதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடப் படுகிறது. இது உலகளாவியதாக தொழில் ரீதியாக உலக ஆசிரியர்களை ஒன்றிணைக்கின்ற தினம் என்று மட்டும் மேலோட்டமாகக் கருதிவிட முடியாது. மனித சமுதாயம் இனரீதியாகவும், மொழிரீதியாகவும், மத ரீதியாகவும், பிரதேசரீதியாகவும் மட்டுமல்ல பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்ற ரீதியில்கூட வேறுபாடு நிறைந்த உலகமாக காணப்படுகிறது. இத்தகைய வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து கல்வித்தாய் என்ற அன்னையின் மூலம் உலக சமுதாயம் முழுவதும் வேற்றுமையில் ஒற்றுமை காணுகின்ற ஒரு திருநாளாகவே இதனைக் கருத வேண்டும்.

ஆகவே கல்வி என்னும் ஒளி இவ்வுலகில் சுடர்விட்டு பிரகாசிப்ப தற்காக தங்களை அர்ப்பணித்துச் செயற்படுகின்ற நல்லாசிரியர்களின் பாதங்களைப் பணிந்து அவர்களின் சேவையைப் போற்றுவோமாக.

ந. அரியரத்தினம் *B. Ed.*


★ குரு பக்தியினால் கை கூடாதது ஒன்றும் இல்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனுடைய வருடாந்த உற்சவம் இலங்கையில் மட்டுமல்ல இன்று உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அவனது அடியவர்களால் புனிதத்துடன் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த வகையில் சந்நிதியானிடம் வருகின்ற அடியவர்களுக்கு நித்திய அன்னதானத்தை குறைவின்றி வழங்கிக்கொண்டிருக்கின்ற சந்நிதியான் ஆச்சிரமமும் அந்த உற்சவகாலத்தில் மேலும் புனிதமும் பொலிவும் அடைவது இயல்பானதே. 1999 ஆம் ஆண்டு வருடாந்த உற்சவத்திற்கு இன்னும் சில தினங்களே இருந்தன. இதனால் உற்சவகாலத்தில் ஒரே நேரத்தில், ஆயிரக்கணக்காக கூடுகின்ற அடியார்களை சமாளிக்கக்கூடிய வகையில் பல ஆயத்தங்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தன.



ஆச்சிரமத்தினுடைய சுவாமிகள் மோகனதாஸ் அவர்கள் ஆச்சிரமத்தில் மட்டுமல்ல ஆச்சிரமத்திற்கு வெளியே சென்றும் உற்சவகாலம் தொடர்பாக செய்யவேண்டிய முன் ஆயத்தங்களைச் செய்வதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அன்று 10 - 09 - 99 செவ்வாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமை சுவாமிகள் யாழ்ப்பாணம் சென்று உற்சவகாலத்திற்கு தேவையான அவசியமான பொருட்கள் பலவற்றை வாங்குவதில் உற்சாகமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அழகிய முருகன் சிலை ஒன்றை அங்கே தற்செயலாகக் காணுகின்ற சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.

அப்படி அதனைக் கண்டவுடன் ஆச்சிரமத்தில் உள்ள பூஜை அறை அவருக்கு ஞாபகம் வந்தது. அங்கே அழகான முருகன் படம் உட்பட பல தெய்வங்களின் படமும் கூடவே நடராஜப்பெருமானுடைய விக்கிரகமும் இருக்கின்றது. ஆனால் முருகப்பெருமானுடைய விக்கிரகம் எதுவும் அங்கே இடம்பெறவில்லை. ஆகவே அந்த சுவாமி அறையில் இந்த அடக்கமான அருள் ததும்பும் முருகப்பெருமானுடைய விக்கிரகம் இடம் பெறுவது எவ்வளவு புனிதத்தைக் கொடுக்கக்கூடியது என்ற சிந்தனை அவர் மனதில் ஆழமாகப் பதிகின்றது. உடனடியாகக் கடை உரிமையாளரிடம் சென்று அதனை எவருக்கும் விற்பனை செய்ய வேண்டாமென்றும் அதனைத் தனக்காக வைத்திருக்குமாறும் கூறி அங்கே நிறைவேற்றவேண்டிய ஏனைய பணிகளை முடித்துக்கொண்டு ஆச்சிரமத்திற்கு திரும்புகின்றார்.

மறுநாள் அவர் குறிப்பிட்டது போலவே யாழ்ப்பாணம் சென்று அந்த முருகனுடைய விக்கிரகத்தை வாங்கிவந்து உற்சவத்திற்கு முதல் நாளான 11 - 08 - 99 புதன்கிழமை அதனை பூசை அறையில்வைத்து தனது விருப்பத்தை நிறைவேற்றுகின்றார். கடையில் அழகுப்பொருட்களாக இருந்த அந்த முருகன்விக்கிரகம் இப்பொழுது அழகுப்பொருளாக மட்டுமன்றி நித்திய ஆராதனைக்குரிய புனிதமான நிலைக்கு உயர்வு பெற்றுவிட்டது. ஆம்! ஆச்சிரமத்தின் பூசை அறையில் நைவேத்தியத்துடன் கூடிய மூன்று நேரப்பூசை இடம்பெறும், பூசைஅறையில் நடைபெறும் பூசையின்போது அடியார்கள் வழிபடும் விக்கிரகமாக அது மாறி விட்டது.

26 - 08 - 99 வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும், 27 - 08 - 99 வெள்ளிக்கிழமை பூக்காரத்திருவிழாவும் இடம்பெற்று உற்சவம் முழுமையாக முடிவடைந்த நிலையிலேயே ஆச்சிரமத்தின் சுவாமிகள் ஓரளவு ஓய்வாகக்காணப்பட்டார்கள் 28 - 08 - 99 சனிக்கிழமை அன்று சுவாமிகள் ஆறுதலாகவும், அமைதியாகவும் காணப்பட்டார்கள். அன்று வழமை போல மூன்றாம் பூசையாகிய மாலைநேரப்பூசையை செய்வதற்காக பூசை அறைக்குள் சென்ற சுவாமிகளுக்கு தான் வாங்கிவந்து வைத்திருக்கின்ற முருகன் விக்கிரகம் தொடர்பாக அதுவரைநாளும் தெரியாத ஒரு குறை அன்றைய தினம் வெளிப்பட்டது. ஆம் அந்த முருகனுடைய விக்

★ மனதை ஒருநிலைப்படுத்துதலே வெற்றிக்கு அடிப்படை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகத்தில் வேல் இடம்பெறவில்லை அதனை அவதானித்த சுவாமிகளுக்கு உடனே தனது குருவாகிய மயில்வாகனம் சுவாமிகளுடைய ஞாபகம் வந்தது. அவர் ஆனந்தாச்சிரமத்தில் இருக்கும் பூசை அறையில் உள்ள முருகன் விக்கிரகத்திற்கு தங்கத்தினால் வேல்செய்து வைத்திருந்தது உடனே ஞாபகம் வந்தது. ஆகவே தாமும் அவ்வாறே செய்தால் என்ன என்று அவருடைய மனம் ஒரு கணம் நினைத்தது. ஆனால் அவ்வாறு தங்கத்தினால் செய்தால் பூசை அறையை பூட்டிப்பாதுகாக்க வேண்டிய ஒரு சுமை ஏற்படும் என்ற காரணத்தினால் தங்கத்தினால் வேல் செய்வது என்ற சிந்தனையை எவ்வளவு விரைவாக நினைத்தாரோ அவ்வளவு விரைவாக அதனை மனதில் இருந்து அகற்றியும் விட்டார்.

இருந்தாலும் முருகனுடைய விக்கிரகத்திற்கு பொருத்தமாக ஒரு வேல் இடம் பெறவேண்டும் என்ற சிந்தனைமட்டும் மிகவும் உறுதியாக மனதில் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் இதனை எப்படிச் செய்வோம் எப்போ செய்வோம் என்று அவர் சிந்திக்கவில்லை. அந்தச்சிந்தனை அவருக்கு தோன்றவுமில்லை மாறாக "முருகா உன்னுடைய காரியத்தை எப்படியோ நீயே பார்த்துக்கொள்" என்ற சிந்தனையே சுவாமிகளுக்கு அப்பொழுது மனதில் ஏற்பட்டது. அந்தச் சிந்தனையின் பின் அவர் அந்த விடயத்தை வெளிப்படுத்தவுமில்லை.

மழைவிட்டாலும் தூவானம் விடுவதில்லை என்பது போல திருவிழா முடிவடைந்த பின்பும் ஆலயச்சூழலில் தொடர்ந்தும் மக்கள் நடமாட்டம் ஓரளவு காணப்பட்டுக் கொண்டேயிருந்தது. 29 - 08 - 99 ஞாயிற்றுக்கிழமை வியாபாரிமூலை பழுவத்தை என்ற இடத்தைச்சேர்ந்த சின்னையா அல்லது இராசா என்பவருடைய மகனின் திருமணமும் அன்று ஆலயத்தில் நடைபெற்றது. அவர்களும் சாப்பாட்டிற்காக ஆச்சிரமத்திற்கு வந்து சென்றுவிட்டனர்.

இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை அன்னதானச் செயற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்து சுவாமிகள் ஆறுதலாக தான் வழமையாக அமரும் இடத்தில் வந்து அமர்ந்து கொண்டார்கள். அவ்வாறு அமரும் பொழுதே அங்கே மேசையில் சிலபூக்களும் அந்த பூக்களுக்குள் அரை குறையாக ஏதோ அலகு போன்ற ஒரு பொருளும் தென்படுவதையும் மேலோட்டமாகக் கவனித்தார்கள். ஆனாலும் அவர் ஓய்வு எடுப்பதற்காகவே அங்கே மேசையின் அருகில் வந்து அமர்ந்ததினால் மேசையின் மீது இருந்த பொருட்கள் மீது அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் அவரை அறியாமலே அவருடைய கை மேசையில் பூக்களின் நடுவே அலகு போல் இருந்த அந்தப் பொருளை எடுத்து விரல்களினால் மேலும், கீழும் உருட்டிக்கொண்டு எதைப்பற்றியோ சிந்தித்துக்கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென மின்னல் பாய்ந்தது போன்ற ஒரு உணர்வு அவருடைய மனதில் ஏற்பட்டது. நேற்று இரவுப்பூசையில், பூசை அறையில் இடம் பெற்றிருக்கின்ற முருகப்பெருமானுடைய விக்கிரகத்திற்கு வேல் இல்லாத குறை பற்றிச்சிந்தித்ததையும் இறுதியில் ஏதோ முருகா நீயே பார்த்துக்கொள் என்று தான் தனக்குள் நினைத்ததும் ஞாபகத்திற்கு வந்தது. ஆகவே ஒரு வேளை தான் நினைத்தபடி ஆற்றங்கரை வேலவன் வேலைத்தான் கிடைக்கச் செய்திருக்கின்றானா? என்று கையில் வைத்திருந்த பொருளை அப்பொழுது தான் உற்று நோக்கினார். என்ன ஆச்சரியம்! அது அழகான ஒரு வேல்தான். அதுவும் பூக்களுடன் சேர்ந்து புனிதத்துடன் அல்லவா கிடைத்திருக்கின்றது. பதட்டத்துடன் சுவாமிகள் கிடைத்தவேலுடன் பூசை அறைக்குள் சென்று அங்கே புதிதாக வாங்கி வந்த விக்கிரகத்திலுள்ள முருகனுடைய கையில் வேலைவைத்து சரிபார்த்தார்கள் என்ன ஆச்சரியம் அளவுகொடுத்துச் செய்தாலும் அப்படிப் பொருந்துமா என்பது சந்தேகமே அப்படிமிகவும் பொருத்தமான வேலாக அது பொருந்தியது.

நான் எப்படிப் பூசை செய்வேன் என்று கலங்கிநின்ற மருதர் கதிர்காமரை கதிர்காமத்திற்கு அழைத்துச்சென்று அங்கேநடைபெறுகின்ற பூசைகளைக் காண்பித்தது மட்டுமன்றி அங்கேயிருந்த பலவகைப்பட்ட வேல்களைக்காட்டி அதில்பொருத்தமான வேலை எடுத்துச்சென்று அதைவைத்து பூசையை மேற்கொள்ளுமாறு ஆற்றங்கரைமுருகன் கதிர்காமருக்கு வழிகாட்டினார். அப்பொழுது பவுணால் உருவாக்கப்பட்டவேல் உட்பட பலவகைப்பட்ட வேல்கள் இருந்தபொழுதும் கதிர்காமர் ஒரு வெள்ளியிலான வேலையே தன்னுடன் எடுத்து வந்து இங்கே வைத்து பூசை செய்தது ஆலயத்தின் வரலாற்றில் அன்று நடந்த சம்பவம்.

அன்று மருதர்கதிர்காமருக்கு வழிகாட்டியது போலவே இன்று சந்நிதியான் ஆச்சிரமத்திலுள்ள பூசை அறையில் விக்கிரகத்துடன் வேலையும் வைத்து பூசைசெய்வதற்கும் ஆற்றங்கரைமுருகன் தன்னுடைய திருவிளையாடலைக் காண்பித்துள்ளான். அவனுடைய திருவிளையாடலுக்கும் ஒரு எல்லைஉண்டோ? இந்த திருவிளையாடல்களை அனுபவிப்பதும் அறிந்துகொள்வதும் கூட ஒரு பேறுஅல்லவா?

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு.

★ நல்லொழுக்கத்தால் துயரங்கள் அழிகின்றன. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் நமசிவாய

# சிவலிங்கம்

இவ்வகையான சிவலிங்கத்தின் அமைப்பையும் தத்துவத்தையும் நோக்கும் போது நடுவே உருளை வடிவான லிங்க பாணம் காணப்படும். இது சிவனைக்குறிக்கும். இது மூன்று பகுதியாகப் பிரித்து அடியிலிருந்து மூன்று பகுதிகளாகப் பிரமபாகம், விஷ்ணு பாகம், உருத்திர பாகம் எனக் காணப்படும் பிரமபாகம் தரைமட்டத்திற்குக் கீழேயும் விஷ்ணு பாகம் ஆவுடையாருள் மறைந்தும் உருத்திரபாகம் ஆவுடையாரின் மேல் நமது கண்களுக்குத் தெரியக் கூடியதாகவும் காணப்படும். இதற்கே பூசை வழிபாடுகள் நிகழ்வதால் பூசா பாகம் என்றும் அழைக்கப்படும். இது 36 தத்துவங்களையும் கடந்தது இப் பாகத்தின் உச்சி பரவெளி என்றும் ஞானாகாசம் என்றும் கூறுவர் பரவெளியை சிதம்பரம் சிற்றம்பலம் எனவும் கூறுவர்.

மேலும் இப் பூசா பாகத்தில் முகம் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்படும் இவ்வகை லிங்கங்களை முகலிங்கம் என்று அழைப்பர் ஒரு முகம் செதுக்கி இருந்தால் ஏக முகலிங்கம் என்றும் நான்கு முகங்கள் செதுக்கி இருந்தால் சதுர்முகலிங்கம் என்றும் அழைக்கப்படும். இவற்றை இந்தியாவின் வடக்குப் பிரதேசத்தில் இன்றும் காணலாம்.

சிவலிங்கத்தின் கீழ்ப்பாகம் அகன்று பருத்துக் காணப்படும் இது ஆவுடையார் என்று அழைக்கப்படும். இது சக்தியைக் குறிக்கும். இதன் ஒரு பகுதி நீண்டு தீர்த்தம் வடியும் பாகமாகக் காணப்படும் இது கோமுகி என அழைக்கப்படும் இது சிவசக்தி அருளைக் குறிக்கும் ஆவுடையாரானது. நாகர (சதுரம்) திராவிட (எண்கோணம்) வேசர (வட்டம்) வடிவங்களில் காணப்படும். இதில் தாமரை இதழ்களுடன் பட்ட பல்வேறு அலங்காரங்கள், படிகள் அமைந்து காணப்படும்.

இச்சிவலிங்கத்தை நோக்கும் போது சிவனும் சக்தியும் இணைந்ததே உலகம்; நாயகனும் நாயகியும் சேர்ந்துள்ள நிலையே குடும்பம் இது மங்களகரமானது என்பதைக் குறிக்கின்றது. திருமூலர் சிவலிங்கத்தினை ஓங்காரத்துடன் கூடிய 'பிரணவமாக விளக்கம் தருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதமாகிய அகரம் சிவத்தையும் விந்துவாகிய உகரம் சக்தியையும் கலையாகிய மகரம் பரத்தையும் குறிக்கும். என்பதனைத் திருமந்திரத்தின் 7ம் தந்திரத்தில்.

" இலிங்க நற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற் கண்டநிறைபு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிலையும் உகாரம்
இலிங்கம் அகார நிறை விந்து நாதமே "

என்கின்றார். இக்கருத்தினை ஸ்ரீ காசியப சிற்ப சாஸ்திரமும் கூறுகின்றது. மேலும் இவ் உலகனைத்தையும் திருமூலர் சிவலிங்கமாகக் காணுகின்றார். நிலப்பகுதி சக்தியாகிய பீடம் (ஆவுடையார்) என்றும் விண்சிவலிங்கம் என்றும் "தரையுற்ற சக்தி தனிலிங்கம் விண்ணாம்" எனும் திருமந்திர அடிகாட்டி நிற்கின்றது. மேலும் சிவனடியாருடைய உடம்பே சிவலிங்கமாகக் காட்சிதருகின்றது என்பதனை குறித்து நிற்கின்றது. (" மானுடராக்கை வடிவு சிவலிங்கம் எனுமடி ") உடம்பு மட்டுமன்றி சிவனாகிய உயிர் சிவலிங்கம் என்பதும் திருமூலரது கருத்தில் உள்ளது.

உள்ளம் பெருங் கோவில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்பு லனைந்தும் காளாமணி விளக்கே.

இக்கருத்தினை அப்பர் சுவாமிகளும் பின்வரும் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.

காயமே கோவிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறையநீர் அமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

இச் சிவலிங்க வழிபாட்டின் வரலாறு பற்றி நோக்கும் போது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சிந்து வெளியிலேயே சிவலிங்கம் வழிபட்டமையும் தொடர்ந்து புராணங்கள் இதிகாசம் மட்டுமன்றிச் சங்ககாலத்தில் இருந்த வழிபாடும் சிவலிங்க வழிபாடே என Dr. இராசாமாணிக்கனார் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பல்லவர்காலம், சோழர்காலம் என இன்று வரை இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் சிவலிங்கம் வழிபடப்பட்டு வருகின்றது. வீர சைவர்கள் சிவலிங்கத்தை மட்டுமே பூசித்து வருகின்றார்கள். என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

★ அறிவின் முதல் பாடம் செல்வத்தை வெறுப்பது. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART 20

## I. GRAVITY

The earth Continuously spins in space. But we do not fall off the surface of the earth. We can move on it like flies walking on a tennis ball. Why don't we fall off? The earth contains an enormovs amount of matter. It's mass is great. Every particle of matter on the earth pull upon every other particle of matter. We call this pulling force gravity. This force of gravty keeps us from falling off the earth.

**II. Write sentences using the following words.**

a) continuous
b) spins
c) particle
d) gravity
e) enormous
f) space
g) fall off
h) every
i) surface
j) pull

**III. Match A with B**

| A | B |
|---|---|
| a) continuous | to hold within itself |
| b) spin | very large |
| c) contain | a very small piece |
| d) enormous | without stopping |
| e) a particle | turn round and round |

இளமையில் சோம்பல்; முதுமையில் வறுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IV. Fill in the blanks with suitable prepositions:-**

**from, on, to, in, of**

a) The earth spins ... ......... space

b) There are 365 days ........... a year

c) A fly can walk ...... ......... a tennis ball

d) Different kinds ............... plants grow ............ the earth.

e) The distance ................. the moon ............ the earth is about 238, 500 miles

**V. Choose the corret form of the verb from the words within the brackets**

a) The earth (rotate, rotates)

b) We (do — does) not fall off the earth

c) The force of gravity (keeps, keep) us from falling off the earth.

d) The rotations of the earth (take, takes) twentyfour hours each

e) The moon (give, gives,) us no heat

**S. Thurairajah**

**( English Tutor )**

★ வாய்ப்பேச்சால் உலை அரிசி வேகுமா? ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

**01 - 10 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. க. சிவக்கொழுந்து J. P.
( உடுப்பிட்டி )

சொற்பொழிவு: 'ஆகமமும் ஆலய வழிபாடும்'

வழங்குபவர் : பண்டிதர் சி. வேலாயுதம்
( ஓய்வு பெற்ற அதிபர் )

---

**08 - 10 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. க. கந்தசாமி
( ஓய்வுபெற்ற தபாலதிபர், கரணவாய் )

சொற்பொழிவு: 'அனுபூதி தந்த அருணகிரி'

வழங்குபவர் : சித்தாந்த பண்டிதர் வ. ஆ. தங்கமயில்

---

**15 - 10 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : செ. நடராசா ( பேரவை உபதலைவர் )

சொற்பொழிவு: 'நெஞ்சிற்கு நிம்மதி
ஆண்டவன் சந்நிதி'

வழங்குபவர் : திரு. கு. மனோகரன் ( ஆசிரியர் )

---

**22 - 10 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : காரை மா. நடராஜா

சொற்பொழிவு: 'யோகாசன மருத்துவம்'

வழங்குபவர் : ஆன்மீக விரிவுரையாளர்
பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா
யோகாசன அப்பியாசம் காரை மா. நடராஜா

---

**29 - 10 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# ஐப்பசி - 1999

வெளியீட்டுரை : சி. சிவபாலசிங்கம்
( கிராம உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை )

மதிப்புரை : செஞ்சொற் செல்வர் திரு. ஆறுதிருமுருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 1999 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2000 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org